REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மார்ச் 10 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2021
வரு. 90 இல. 59 | Thursday 10, March, 2022 | 20 பக்கங்கள் | 30/-

கொவிட்-19 தொடர்பான இலவச மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.
Doc Call 247
Sri Lanka Medical Association
SLTMOBITEL நிகரற்ற இணைப்பு

## கொவிட் PCR சோதனை குறைக்கப்படவில்லை

### வெளியாகிய செய்திக்கு அமைச்சு மறுப்பு



கொவிட் பரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளாந்த கொவிட் தொற்று உறுதியாளர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமைக்கு பரிசோதனை எண்ணிக்கை குறைவே காரணம் என எழுந்த குற்றச்சாட்டுக்களுக்கு சுகாதார அமைச்சு இவ்வாறு

06

## அரச அதிகாரிகளுக்கான விசேட எரிபொருள் கட்

### அமைச்சரவை தீர்மானத்துக்கமைய முடிவு



அரச உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் விசேட எரிபொருள் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான சுற்றுநிருபம் நேற்றுமுன்தினம் அரச நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட

06

### வெளிநாட்டு பணியாளர் அனுப்பும்

## டொலருக்கான மேலதிக கொடுப்பனவு நிறுத்தம்?

### CBSL ஆளுநர் அஜித் கப்ரால் ஆராய்வு



வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பும் டொலர் ஒன்றுக்கு 8 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்காதிருக்க மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தீர்மானித்துள்ளார்.

அனுமதிப்பத்திரமுடைய அனைத்து வணிக வங்கிகள் மற்றும் விசேட

06

## உலகிலேயே ஆதிமொழி தமிழ்மொழி ஆகும்

### கிழக்கு ஆளுநர் அனுராதா புகழாரம்



தமிழ் மொழி என்பது ஆதி மொழியாகும். இதனை உலகின் பல நாடுகளிலும் உள்ள மக்கள் பேசி வருகின்றனர். இதன்மூலம் தமிழ் மொழியின் பாரம்பரியத்தை புரிந்து கொள்ள முடியுமென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் "நல்லிணக்கத்தின் திறவுகோல் மொழியே" எனும்

06

### தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பு சட்டம்:

# ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் எந்த ஒரு சரத்தும் கிடையாது

### முடிந்தால் நிரூபித்து காட்டுமாறு எதிரணிக்கு நாமல் சவால்



**தகவல் அறியும் சட்டத்துக்கு அப்பால் செல்லும் ஒரு சட்டமல்ல எனவும் சபையில் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**


தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டத்தினால் ஊடக சுதந்திரம் பறிக்கப்படவோ கட்டுப்பாடுகள் விதிக்கப்படவோ மாட்டாதென இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் அபிவிருத்திக் கூட்டிணைப்பு, கண்காணிப்பு

06




## ரஷ்யா, வடகொரியா, சீனா இலங்கைக்கு ஆதரவாக களத்தில்

### ஜெனீவாவில் பெலாரஸும் பச்சைக்கொடி



உக்ரைன் மீதான படையெடுப்பு தொடர்பாக தடைகளை எதிர்கொண்டுள்ள ரஷ்யாவும் பெலாரஸும் ஜெனீவா ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு சாதகமாக கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள்,

06

## பொய் கூறி ஆட்சியை கைப்பற்ற முனைய வேண்டாம்

### இருக்கும் எதிர்க்கட்சியையும் இழக்க நேரிடும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பொய்களை கூறி 2015 இல் ஆட்சியைக் கைப்பற்றிய எதிர்க்கட்சியினர் தற்போது மீண்டும் பொய்களைக் கூறி ஆட்சியை கைப்பற்ற முனைந்தால்,



இருக்கின்ற எதிர்க்கட்சியையும் இழக்க நேரிடுமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களை துரத்தித் துரத்தி

06

## எரிபொருள் – மின் பாவனையை சிக்கனப்படுத்த அறிவுறுத்தல்

### அரச நிறுவனங்களுக்கு பொது சேவைகள் அமைச்சு சுற்றறிக்கை

அரச நிறுவனங்களில் எரிபொருள் மற்றும் மின்சாரத்தை சேமிப்பதன் ஊடாக செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையொன்றை பொது சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ளது. சுற்றறிக்கையின்படி, அரச நிறுவனங்களில் வளி சீராக்கிகளின்

06



## சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர் IMF அறிக்கையை சமர்ப்பியுங்கள்

### முன்னாள் பிரதமர் ரணில் கோரிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

சர்வகட்சி மாநாடொன்று நடைபெற இருப்பதால் அதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை வழங்குமாறு முன்னாள் பிரதமர்

06

## அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயார்

### சபையில் இராதாகிருஷ்ணன் MP உரை



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

மலையக மக்கள் தொடர்பில் பாகுபாடற்ற விதத்தில் அரசு செயற்படுமானால் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு நாம் பூரண ஆதரவு வழங்கத்

06

## ஜனாதிபதியின் மாமியார் காலமானார்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாரியார் அயோமா ராஜபக்ஷவின் தாயார் பத்மாதேவி பீரிஸ் அமெரிக்காவில் காலமானார். இறக்கும் போது அவருக்கு 89 வயதாகும்.

பத்மாதேவி பீரிஸ், அமெரிக்காவின்

06



## தமிழர்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பு

### TNA தூதுக்குழுவிடம் அமெரிக்க தூதுவர் உறுதி

03



### கிளிநொச்சியில் காயமடைந்த நிலையில்

## பொலிஸ் நிலையத்தில் ஆந்தை ஒன்று தஞ்சம்

09

### விக்கல் வீராச்சாமி



தலைவரே, ஆன்மீக விழாவில வந்து அரசியல் பேசுறீங்க எண்டு சனம் கொஞ்சம் முகம் மாறி நிக்குது, பார்த்து பேசுங்க கல் வீச்சு நடக்கலாம்....

தம்பி, இத்தன கேமராக்கள் ஊடக தம்பிமார் வந்திருக்கிறாங்க, இந்த சந்தர்ப்பத்த நழுவ விட நான் என்ன ஆன்மீகப் பேச்சாளரே...!!!

## பாமஸிகளுக்கான மருந்து விநியோகத்தில் இடையூறு

### நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகும் நிலை



அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவாக இலங்கை மத்திய வங்கி கணித்ததைத் தொடர்ந்து, பிரதான மருந்து உற்பத்தி நிறுவனங்கள்

06

### வெளிநாட்டு நாணயங்களை

## அனுமதியின்றி விற்பனை செய்வதற்கு தடை



இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின்றி, வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்வது அல்லது மாற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அவ்வாறு அனுமதியின்றி வெளிநாட்டு பண பரிமாற்றங்களில்

06

### இலங்கை – இந்தியாவுக்கிடையில்

## அதிசொகுசு விசேட உல்லாச கப்பல் சேவை

தமிழகத்திலிருந்து இலங்கைக்கான அதிசொகுசு உல்லாச கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்தியாவினால்

06



TRIPLE BLASTER
இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே | நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog
எதிர்காலம் இன்றே.





# எமது நாட்டின் தீர்மானிக்கும் ஆற்றல் மிக்கவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ








எமது நாட்டின் தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற 2022 சர்வதேச மகளிர் தின கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இவ்வருட சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு இடம்பெற்றது.

துணிச்சலான பெண்களைப் பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்களின் உற்பத்தி பொருள் கண்காட்சி மற்றும் விற்பனை நிலையத்தை பிரதமர் பார்வையிட்டார்.

சர்வதேச தரத்திற்கு ஏற்ப 10 சர்வதேச மொழிகளை பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்தையும் பிரதமர் இதன்போது ஆரம்பித்து வைத்தார்.

'தியனிய' வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவிகளுக்கு இலவச சுகாதாரப் பொருட்கள் விநியோகிக்கும் செயற்பாட்டின் இரண்டாம் கட்டம் பிரதமரின் பாரியார் திருமதி. ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ தலைமையில் குறியீட்டு ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதமர் ஆற்றிய உரை,

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இன்று நாம் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாட மறக்கவில்லை. நாம் மட்டுமின்றி உலகில் உள்ள பல நாடுகள் பல பாரதூரமான பிரச்சினைகளை எதிர் கொண்டாலும் இந்த சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாட மறக்கவில்லை. அது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

நம் நாட்டில் பெண்கள் என்ன விரும்புகிறார்கள், நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி பெண்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

உலகமே ஏற்றுக்கொண்ட ஒரு விடயம் தான் பெண்களுக்குள்ள மிகப் பெரிய பிரச்சினை போர். போரினால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உக்ரைனும் ரஷ்யாவும் மோதிக் கொண்டாலும், அமெரிக்காவும், ஈராக்கும் மோதிக் கொண்டாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே.

நிகழ்வில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும,இராஜாங்க அமைச்சர்களான பியல் நிசாந்த, சனத் நிசாந்த, விமலவீர திஸாநாயக்க,பாராளுமன்ற உறுப்பினர்கள், பல நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





## முழுநாட்டையும் கண்ணீரில் ஆழ்த்தி விடைபெற்றுச் சென்ற

# யானைகளின் அரசன் ராஜா



1953 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாவது வாரம் இந்தியாவின் கர்நாடக பிராந்தியத்தில் மைசூர் ராஜ்யத்தில் பழமையான இந்திய உடையார் அரச பரம்பரைக்கு சொந்தமான மகாராஜாவின் மாளிகையில் ஆண் குழந்தையொன்று பிறந்தது. அந்த செய்தியை அரண்மனை சேவகிகள் மைசூர் மகாராஜா ஜெய சாமரராஜேந்திர உடையாருக்கு தெரிவித்தனர். மகாராஜாவும் மகாராணியும் அந்த செய்திகேட்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கும் வேளையில் அரசனை சந்திக்க வந்த மாளிகையின் யானைகளை பராமரிக்கும் தலைவன் யானை பந்தியில் புதிதாக சிறுது நேரத்துக்கு முன்னர் இரண்டு யானைகுட்டிகள் பிறந்ததாக கூறினான்.

அன்று தொடக்கம் மகாராஜாவுக்கு பிறந்த குழந்தையும் யானைக் குட்டிகள் இரண்டும் அனைவரினதும் அன்பான பராமரிப்பில் வளர்ந்து வந்தனர்.

இதேவேளை மாளிகையில் மகாராஜாவின் உறவினர் நீண்ட காலமாக சுகவீனமுற்று இருந்தார். அவருக்கு எவ்வித சிகிச்சையும் நலம் அளிக்க வில்லை. அவ்வேளையிலேயே இலங்கையில் வசிக்கும் தேரர் ஒருவர் வைத்தியம் செய்வதாக தகவல் மகாராஜாவுக்கு கிடைத்தது. அத் தேரர் வைத்தியரான நீலம்மஹர தேரராவார்.

மைசூர் மாளிகையின் நோயாளி நீலமஹர தேரரிடம் சிகிச்சைக்காக ஒப்படைக்கப்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பின்னர் நோயாளி முற்றிலுமாக சுகமடைந்தார். அதனால் மகிழ்ச்சியடைந்த மகாராஜா தேரரிடம் அவருக்கு என்ன தேவையோ அதனை வழங்க தயாராக இருப்பதாக கூறினார். அவர் விரும்புவதை கேட்குமாறு கூறினார். நோயாளிக்கு சிகிச்சை அளிப்பது சுகமாக்கவே தவிர வேறு எதனையும் அவர் விரும்புவதில்லை என்று அரசரிடம் கூறினார். ஆனால் அந்த பதிலில் திருப்தி அடையாத அரசர் மாளிகையில் எல்லோரின் அன்பிற்கும் பாத்திரமாக வளர்ந்து வந்த யானைக் குட்டிகள் இரண்டையும் நினைவு பரிசாக தேரருக்கு வழங்குவதற்கு விரும்பினார். நீலம்மஹர தேரரும்அதனை அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

ஐந்து வயதான இரண்டு யானை குட்டிகளும் கொழும்பு துறைமுகத்தின் ஊடாக கொண்டு வரப்பட்டு நீலம்மகஹரைக்கு கொண்டு வரப்பட்டது. அதில் 'நவம் ராஜா' கங்காராமைக்கு வழங்கப்பட்டது. மற்றைய யானையான 'விஜயராஜா' இளம் வயதை அடையும் வரை நீலம்மஹர தேரரிடமே வளர்ந்தது.

25 வருடங்களுக்கு பின்னர் 'விஜயராஜா '' பண்டாரகம பாராளுமன்ற உறுப்பினர் ஹர்பட் விக்ரமசிங்கவுக்கு சொந்தமானது. நீல மஹரவிலிருந்து கொண்டுவரப்பட்ட விஜயராஜா ஹொரணயில் பல காலமாக விக்ரமசிங்கவின் பராமரிப்பில் இருந்தது.

இங்கே இருக்கும் வேளையில் 1978ஆம் ஆண்டு நெதுன்கமுவையை சேர்ந்த வைத்தியர் தர்மவிஜய' விஜய ராஜா' 'யானையை கண்டார். பார்த்தவுடனேயே அதன் அழகையும் கம்பீரத்தையும் கண்ட அவர் உடனடியாக அதனை விலைக்கு வாங்கினார்.

அதன் பின்னர் 'விஜயராஜா 'வைத்தியர் தர்மவிஜயவின் பாதுகாப்பில் அன்புடன் நெதுன்கமுவிலேயே வசித்தது. அது ஆசியாவில் வசிக்கும் நீண்ட தந்தங்கள் உடைய யானைகளில் ஒன்றாகும்.

வைத்தியர் தர்ம விஜயவின் இறப்புக்குப் பின்னர் அவரது மகனான ஹர்ஷ தர்ம விஜய யானையை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 10 அடி 5 அங்குல உயரமான ராஜா எல்லா வகையிலுமே கண்டி தலதா பெரஹரா தந்த பேழையை தாங்குவதற்கான தகுதியை கொண்டிருந்தது.

அதனால் பல தசாப்தங்களாக செங்கடகளல எசல பெரஹர தந்த பேழையை தாங்கிச் சென்ற 'ராஜா' வுக்கு பின்னர் நெதுன்கமுவே ராஜா அதனை தாங்கிச் செல்லும் அதிர்ஷ்டசாலியானது. ஒவ்வொரு முறையும் கண்டியை நோக்கி 90 கிலோமீட்டர் தனது யானைப் பாகனாக கலு மாமாவுடன் நடை பயணத்திலேயே ராஜா சென்றது. அவ்வாறு செல்லும் வேளையில் பூரண பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டிலிருந்து அது வருடந்தோறும் தனது நடை பயணத்தை மேற்கொண்டிருந்தது. அதன் யானைப்பாகன் வில்சன் கொடிதுவக்கு. அதன் காரணமாக மக்கள் நெதுங்கமுவ ராஜாவை 'நடந்து செல்லும் ஒரே யானை' 'ஆசியாவின் உயரமான யானை' 'எமது நாட்டின் பெரிய யானை' என அழைத்தார்கள்.

அலங்கார உடை தரித்து கம்பீரமாக தலதா பெரஹரவில் பயணிக்கும் ராஜா தலதா தந்த பேழையை சுமந்த பின்னர் மிகவும் கவனமாகவே அடி எடுத்து வைக்கும். ராஜா தலதா பெரஹராவில் மாத்திரமல்ல இரத்தினபுரி மகா சமன் தேவாலய, பெல்லன்வில, களனி, கடுவல, கம்பஹா, வென்னப்புவ போன்ற பிரதேசங்களில் நடைபெறும் பெரஹரவிலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.

நீண்ட காலமாக தலதா தந்த பேழையை தனது முதுகில் சுமந்து செல்வதற்கு பாக்கியம் செய்த நெந்துன்கமுவே ராஜா தனது 69வது வயதில் சியநே கோரளயில் தனது இறுதி மூச்சை விட்டுள்ளது.

நெந்துன்கமுவே ராஜா தேசிய சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ராஜாவின் உடலை எதிர்கால பரம்பரை தரிசிப்பதற்காக பாதுகாக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பந்துல குணரத்ன

தமிழில் வீ.ஆர்.வயலட்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk



**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் மாசி 26
ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: மரண யோகம்
திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**
மேஷம் - முயற்சி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - சுகம்
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# பிரதமரின் தலைமையில் 10 பாடசாலைகள் தேசிய பாடசாலை கட்டமைப்பில் இணைவு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் 08 பெண்கள் பாடசாலைகளும் 02 கலவன் பாடசாலைகளும் தேசிய பாடசாலை கட்டமைப்பில் இணைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் (08) நடைபெற்றது.

நாட்டை கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தினூடாக கல்வி அமைச்சின் அனுசரணையில் 'ஆயிரம் தேசிய பாடசாலைகள் வேலைத்திட்டத்தின் கீழ் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த பத்து பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக அறிவிப்பதற்கான பெயர்ப் பலகைகள் பிரதமரினால் அலரி மாளிகையிலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாக ஒரே தடவையில் திறந்துவைக்கப்பட்டன.

பெலிஅத்த புவக்தண்டாவ தம்மபால மகளிர் பாடசாலை, பிபில யஷோதரா மகளிர் பாடசாலை, தொம்பே தேவி பெண்கள் பாடசாலை, கல்முனை மஹமுத் பெண்கள் பாடசாலை, கெகிராவ வித்யார்த்த மகா வித்தியாலயம், கேகாலை சுவர்ண ஜயந்தி மகா வித்தியாலயம், ஹட்டன் கெப்ரியல் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்ட் உயர் பெண்கள் பாடசாலை, தங்கொடுவ பௌத்த மகளிர் பாடசாலை மற்றும் வலஹந்துவ ஜனாதிபதி பெண்கள் பாடசாலை ஆகியன இவ்வாறு தேசிய பாடசாலை அமைப்பில் இணைக்கப்பட்டன.

புதிதாக இணைக்கப்பட்ட 10 தேசிய பாடசாலைகளுடன் இலங்கையின் மொத்த தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 395 ஆக உயர்ந்துள்ளது.

06



## தவக்கால சிந்தனை



### தட்டுங்கள் திறக்கப்படும்

தட்டுங்கள்! தட்டுங்கள்!
தட்டுங்கள்! தட்டுங்கள்!
'யாரங்கே?'
'உண்மை'
'போய் விடு! உன்னை எனக்குத் தெரியாது.' தட்டுங்கள்! தட்டுங்கள்!

'யாரங்கே'
'கோபம்வெறுப்பு பகை சீற்றம்'
'உள்ளே வாரும்! நானும் அவ்வெண்ணங்களையே தற்போது கொண்டுள்ளேன்'

தட்டுங்கள்! தட்டுங்கள்!
'யாரங்கே'
'யேசுகிறிஸ்து'
'வெளியே போ'
'பொறுமையாய் இரும்! நான் இங்கு கற்களையோ அல்லது நச்சுப் பாம்புகளையோ தர வரவில்லை. நான் இங்கு கேட்பதற்கும் தேடுவதற்கும் உன்னை காண்பதற்கும் வந்துள்ளேன்.

இங்கு நான் அப்பங்களில் உனக்கு என்னைத்தர வந்துள்ளேன்.'

இயேசுகிறிஸ்து நமது இதயத்தின் தேவைகளை அறிந்து நிறைவேற்றும் வேந்தர். எனவே அவரது வாசலண்டை வந்து அவரது கதவுகளில் விடாமுயற்சியுடன் தட்டுவோம். அவர் நமது குரல்கேட்டு நமக்காக தனது கதவுகளைத் திறந்துவிடுவார்.

இத்தவக்காலப் பயணம் பயனுள்ளதாக மாற இடைவிடாமல் தட்டிக் கொண்டே இருப்போம்.

அருட்தந்தை நவாஜி...

# கிராம மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காகவே தேசிய பாடசாலை திட்டம் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

கிராம மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக மாகாண பாடசாலைகளை பொறுப்பேற்பதில் எந்த தவறும் கிடையாது என தெரிவித்த சபை முதல்வர், கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஜூன் மாதமாகும் போது தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 542 ஆக அதிகரிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

தேசிய பாடசாலைகள் அற்ற பிரதேசங்களில் தேசிய பாடசாலைகள் அமைக்க 1,000 தேசிய பாடசாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஜீ.எல்.பீரிஸ் முன்னெடுத்த திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

மாகாண சபைகளுடன் உரையாடி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேவையான பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாடசாலை திட்டத்தை ஜனாதிபதி ஜனவரியில் தொடங்கினார். ரக்வான தமிழ் பாடசாலையும் தேசிய பாடசாலையாக அறிவிக்கப்பட்டது. மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் 10 மகளிர் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக அறிவித்தார். ஜூன் மாதமாகும் போது தேசிய பாடசாலைகள் 542 ஆக அதிகரிக்கப்படும். மாகாண சபைகளுடன் பேசியே இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. கிராம மட்டத்தில் தேசிய பாடசாலைகளை உருவாக்கவே சகல வலயங்களிலும் தேசிய பாடசாலைகள் அமைக்க ஜனாதிபதி தலைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறுக்கீடு செய்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, 13

06



# தமிழர்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பு

### TNA தூதுக்குழுவிடம் அமெரிக்க தூதுவர் உறுதி

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றிகொள்வதில் அமெரிக்காவின் முழுமையான ஒத்துழைப்பும் உதவிகளும் கிடைக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்டெம்பரில் கொண்டுவரும் விரிவான அறிக்கையை அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். தமிழ் தேசிய

06





எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்கும் நோக்குடன் Korean SPA Packaging (Pvt) Ltd நிறுவனத்துடன் 3.5 பில்லியன் ரூபா முதலீட்டுக்கான ஒப்பந்தம் நேற்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. அமைச்சின் செயலாளர் ஜெனரல் தயா ரத்னாயக்க கடதாசி நிறுவனத்தின் தலைவர் விமல் ரூபசிங்க, கொரிய நிறுவனத்தின் தலைவர் அனுரத் அபேசிங்க ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## புதிய கட்சிகளாக பதிவு செய்யுமாறு 76 விண்ணப்பங்கள்



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவு செய்ய 76 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த விண்ணப்பங்கள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கையை தொடங்க தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

தற்போது வரையில் தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக 79 கட்சிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) டபிள்யூ.பீ. பாலித பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், நியமனக் கடிதத்தை (08) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, பாலித பெர்னாண்டோவிடம் கையளித்தார்.

## தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பு சட்டமூலம்: மாற்றுக் கருத்துகள் உள்ளவர்களிடமும் ஆலோசனைகளை உள்வாங்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலத்தை சில காலங்களுக்கு ஒத்திவைத்து இது தொடர்பில் மாற்றுக் கருத்து இருப்பவர்களின் ஆலோசனைகளையும் உள்வாங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே

06

## தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம்: நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களின் தரவுகளைப் பாதுகாப்பதே நோக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களின் தரவுகள் பாதுகாக்கப்படுவதாக நீதியமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் தெற்காசிய பிராந்தியத்தில் முதலாவதாக இந்த சட்டத்தை நிறைவேற்றிய நாடு என்ற பெருமை எமக்குரியது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து பிரஜைகளுக்கும் நன்மையளிக்கும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தமது சேவைகளை மிக இலகுவாக பெற்றுக்கொள்ள இதன் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

தரவு அதிகாரசபை தொடர்பிலும் அதன் தகுதி, தகைமை தொடர்பிலும் சபையில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி சுமந்திரனும் சில கருத்துக்களை முன்வைத்தார்.

உண்மையில் கடந்த அரசாங்கத்தில் நீங்கள் சரியாக செயற்பட்டிருந்தால் பயங்கரவாத தடைச்சட்டம் கூட கொண்டுவரப்பட்டிருக்காது.

ஊடகவியலாளர்களின் உரிமை தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நாட்டு மக்களின் உரிமை, மக்களுக்கான கருத்து சுதந்திரம் என்பது எல்லாம் ஒன்றுதான். ஊடகத்திற்கு என தனியான சுதந்திரம் கிடையாது, ஊடகவியலாளர்கள் சரியானதை தெரிவிக்க வேண்டும். தேவையில்லாதவற்றுக்கு மட்டுப்படுத்தல்கள் மிக அவசியமானது. அனைத்திற்கும் சுதந்திரத்தை வழங்க முடியாது.

இந்த சட்டமூலத்தின் மூலம் தேவையான

06

## இந்திய மீனவர் பிரச்சினைக்கு வெளிவிவகார அமைச்சர் தீர்வு காண வேண்டும்

### சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



இந்திய மீனவர்களின் இழுவைமடிப்படகு மீன்பிடி விவகாரத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கையாண்டு தீர்வு காண வேண்டுமென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் கோரினார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

இந்திய மீனவர்களின் இழுவை மடிப்படகு மீன்பிடியால் வடக்கு, கிழக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தவிடயம் தொடர்பாக தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் கோரிய போது, இந்திய பிரதமருடன் நாங்கள் கதைக்கின்றோம், பிரச்சினைக்கான தீர்வை எடுக்கின்றோமென பலதடைவைகள் கடற்தொழில் அமைச்சர் வாக்குறுதியளித்தார். இந்திய மீனவர்களின் இழுவைமடிப்படகு மீன்பிடி பிரச்சினையில் எமது மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கடற்தொழில் அமைச்சரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கையாளவேண்டும். முன்பு கடற்தொழில் அமைச்சராக மஹிந்த அமரவீர இருந்தபோதும் இப்படியான பிரச்சினைகள் வந்தன. எனினும் அவர் சரியான முறையில் கடற்படையுடன் அணுகி அந்தப்பிரச்சினைகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியிருந்தார். எமது மீனவர்கள் மீன்பிடிக்கும் வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுத்திருந்தார் என்றார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 162.95 | 168.64 |
| கனடியன் டொலர் | 173.27 | 179.87 |
| யூரோ | 245.45 | 255.37 |
| ஜப்பான் யென் | 1.9330 | 2.0007 |
| சிங்கப்பூர் டொலர் | 164.58 | 169.59 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 248.92 | 248.89 |
| அமெரிக்க டொலர் | 225.20 | 229.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 608.69 | கட்டார் ரியால் | 62.96 |
| குவைத் டினார் | 755.43 | சவூதி ரியால் | 61.16 |
| ஓமான் ரியால் | 596.09 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.48 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 06

**குறள் தரும் சிந்தனை**



பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு

நாளும் தொடர்ந்து வாட்டுகின்ற வறுமை,
அறிவை அழிப்பது போல மறதி,
புகழை அழித்து விடும்.

# புதுப்பிக்கத்தக்க சக்திவளங்களில் கவனம் செலுத்துவது அவசியம்

நாட்டில் மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் புதுப்பிக்கத்தக்க சக்தியின் முக்கியத்துவமும் தேவையும் பெரிதும் உணரப்பட்டுள்ளன. கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடி உருவாக்கியுள்ள எரிபொருள் பற்றாக்குறை இதற்கு வழிவகை செய்துள்ளது.

புதைபடிம எரிபொருள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆனால் அதனைக் கொள்வனவு செய்வதற்கு அந்நிய செலாவணியைப் பயன்படுத்த வேண்டும். என்றாலும் கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடியினால் அந்நிய செலாவணியை தொடராகவும் சீராகவும் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக எரிபொருள் பற்றாக்குறைக்கு கடந்த சில வாரங்களாக இந்நாடு முகம் கொடுத்துள்ளது. இதன் காரணத்தினால்தான் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியிலும் நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. அதன் விளைவாகவே தினமும் ஆறு ஏழு மணித்தியாலம் மின்வெட்டை அமுல்படுத்தும் நிலைமையும் உருவாகி இருக்கின்றது.

ஆனால் இலங்கையானது புவியில் பூமத்தியரேகைக் கோட்டுக்கு அண்மையில் அமைந்திருக்கும் நாடுகளில் ஒன்றாகும். வருடத்தின் 365 நாட்களிலும் பெரும்பகுதி சூரிய வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நாடாக விளங்குகிறது இந்நாடு. இதன் பயனாக சூரியஒளியைப் பயன்படுத்தி நாட்டுக்கு தேவையான அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

அதேபோன்று இந்நாடு நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட ஒன்றாக உள்ளது. அதன் ஊடாகக் காற்றைப் பயன்படுத்தியும் போதியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய சாத்தியமும் இந்நாட்டில் காணப்படுகின்றது. அத்தோடு தண்ணீரைக் கொண்டும் மின்உற்பத்தியை செய்து கொள்ள முடியும்.

தற்போது இம்மூன்று வளங்களையும் பயன்படுத்தி இந்நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்யபடுகின்றது. ஆனால் அம்முறைமைகளை ஒழுங்குமுறையாகப் பயன்படுத்தி நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தைப் போதியளவில் உற்பத்தி செய்து கொள்ளலாம்.

இவற்றை விடவும் உலகில் சில நாடுகள் கடலலையைப் பயன்படுத்தியும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறைமையையும் கொண்டுள்ளன. அந்த முறைமையையும் இங்கு பயன்படுத்தலாம். அதற்குத் தேவையான கடல்வளமும் இந்நாட்டைச் சூழ உள்ளது. இவ்வாறு புதுப்பிக்கத்தக்க சக்தி வசதிகளை பரவலாகக் கொண்டிருக்கும் இந்நாடு இங்கு உற்பத்தி செய்யப்படாத புதைபடிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்உற்பத்தித் துறையில் கடந்த காலங்களில் கவனம் செலுத்திய தன் விளைவாகவே தற்போது இந்நாடு இந்த மின் நெருக்கடிக்கு முகம் கொடுத்திக்கின்றது.

ஆனால் அன்றே புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களைப் பயன்படுத்திய மின்னுற்பத்தில் நாடு அதிக கவனம் செலுத்தி இருந்தால் தற்போதைய மின் நெருக்கடி ஏற்பட்டிருக்காது. கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளால்தான் இந்த நிலைமை ஏற்பாட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. தற்போதைய சூழலில் மின்நெருக்கடியின் தாக்கங்களைக் குறைப்பதற்காக மின்சாரம் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதோடு மின்சாரப் பயன்பாட்டை 20 வீதம் குறைக்குமாறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் வடமாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா, சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி வடமாகாணத்திலுள்ள அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுக்க உள்ளதாகவும், எதிர்காலத்தில் வடமாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது பெரிதும் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

இவ்வாறான நடவடிக்கையை ஏனைய மாகாணங்களும் கடைப்பிடிக்க வேண்டும். அதன் ஊடாக புதைபடிம எரிபொருளைப் பயன்படுத்தும் மின்னுற்பத்தியில் நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். இந்நாடு புதுபிக்கத்தக்க சக்தி மூலங்களைத் தாராளயமாகக் கொண்டிருக்கின்றது. அதனால் புதைபடிம எரிபொருளைக் கொள்வனவுக்கு செலவாகும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்திக் கொள்ளவும் முடியும். அத்தோடு புதைபடிம எரிபொருளைப் பயன்படுத்திய மின்னுற்பத்தி மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற தீங்குகளையும் பெரிதும் குறைத்துக் கொள்ளலாம். ஆகவே சூரியசக்தி, காற்று, தண்ணீர் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்திய மின்னுற்பத்தியில் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# விமானப்படையின் 71 ஆண்டு நிறைவு; சூழல் பாதுகாப்பு திட்டம் முன்னெடுப்பு

இலங்கை விமானப்படையின் 71 ஆவது வருட நிறைவை முன்னிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் வழிகாட்டலின் கீழ் 3000 இற்கும் அதிகமான விமானப்படை அங்கத்தவர்களின் பங்கேற்பில் கடந்த 05 ம் திகதி கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகள், மக்கள் அன்றாடம் நடமாடும் பொது இடங்கள் போன்றவற்றை சுத்தம் செய்யும் பணிகள் இடம்பெற்றன.

டெங்கு பரவலைத் தடுத்து சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவதே இதன் பிரதான நோக்கம் ஆகும். இதற்கான ஏற்பாடுகளை இலங்கை விமானப்படை தரைவழி செயற்பாட்டுப் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் ஜனக அமரசிங்க ஒருங்கமைத்து செயற்படுத்தினார்.

இதன் போது கொழும்பு மத்திய பேருந்து நிலையம், குணசிங்கபுர பேருந்து நிலையம், பஸ்தியன் மாவத்தை பேருந்து நிலையம், பிரிவு 2 கோட்டை புகையிரத நிலையம், பிரிவு 3 மருதானை புகையிரத நிலையம், பொரளை பொது மயானம், பிரிவு 4 கங்காராம விகாரைக்கு அருகில் உள்ள பெய்ரா ஏரியின் சுற்றுப்புற பகுதி, கொழும்பு விமானப்படைத்தள மற்றும் புறநகர் பகுதிகள், கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகள் என்பன விமானப் படை உறுப்பினர்களால் துப்பரவு செய்யப்பட்டன. இதேவேளை மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் தி எயார் போர்ஸ் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துடன் இணைந்து வடிகால் மற்றும் கால்வாய்களில் தொற்று நீக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது. டெங்கு பரவும் விதத்தில் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் விமானப்படை வீரர்களினால் ட்ரான் இயந்திரம் மூலம் இரசாயன திரவம் தெளிக்கப்பட்டது.







# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட சம்மேளன மாநாடு இன்று

'சுதந்திரம் பெற்ற மக்களின் நல்வாழ்த்துகள்' எனும் தலைப்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட சம்மேளன மாநாடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலுள்ள இராணுவத் தூபிக்கு அருகாமையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டின் பிரதான கதாபாத்திரமாகத் திகழ்பவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா ஆவார். சுதந்திரக் கட்சி வரலாற்றிலேயே கொழும்பு மாவட்டத்திலிருந்து மத்திய கொழும்பு அமைப்பாளராக முஸ்லிம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை அக்கட்சிக்கு புதியதொரு உத்வேகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முக்கிய பங்கிருக்கிறது. அக்கட்சியின் கடந்த காலஅரசியல் தலைவர்கள், தங்களின் அளப்பரிய உழைப்பைஅக்கட்சியின் வளர்ச்சிக்காக உரமாக்கியிருக்கின்றார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகளின் ஒரு தேசிய வெளியீடு கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை மாலை கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 'முழு நாட்டையும் சரியான பாதைக்கு' என்ற தலைப்பிலான தேசிய வெளியீட்டினை அன்றைய தினம் வெளியீட்டு வைத்தனர்.

இதில் 11 கட்சிகள் பங்கு கொண்டிருந்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கையின் கம்பியூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பிவிதுரு ஹெல உருமய, தேசிய காங்கிரஸ், இலங்கை மக்கள் கட்சி, விஜய தரணி தேசிய சபை, ஐக்கிய மக்கள் கட்சி (எக்சத் மஹஜன பக்ஷய), யுதுகம தேசிய அமைப்பு ஆகியனவே கலந்து கொண்டிருந்த கட்சிகளாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகளினால் வெளியிடப்பட்டிருக்கும் தேசிய வெளியீட்டில் பதியப்பட்டிருக்கும் காலத்தின் மக்கள் தேவைகள் பின்வருமாறு:

வெளிநாட்டுச் செலாவணி இருக்கையை அதிகரித்துக் கொள்ளல், பயிற்சி பெற்ற தொழிலாளர்களையும் உழைப்பாளர்களையும் பயன்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையை அரவணைத்தல், சுற்றுலாத்துறையை முழுமையாக மீண்டும் நிலைப்படுத்திக் கொள்ளல், நீண்டகால மின் உற்பத்தித் திட்டத்தை உள்வாங்கிய தேசிய கொள்கை ஒன்றையும், இலக்கு நோக்கிய செயற்பாட்டுத் திட்டத்தையும் முன்வைத்தல், இறக்குமதி வரிகளில் வறியவர்களுக்கு நிவாரணம், மொத்த வியாபாரிகளின் ஆதிக்கத்தின் ஊடாக பொருட்களைக் கொள்வனவு செய்யும் நிலையங்களுக்கு பதிலாக, விவசாயிகளின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் பொருளாதார மத்திய நிலையங்கள், நாடு பூராகவும் உடன் 33,000 சிறிய குளங்கள் மற்றும் அணைகளுக்கு அருகில் சூழல் பாதுகாப்பை மறுசீரமைத்தல், விவசாயத் திணைக்களத்திற்குரிய திட்டத்தைப் பயன்படுத்தி, தேசிய விதை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி நிலையங்களுக்கு மீண்டும் உயிரூட்டல், உர மானியத்தை விவசாயிகளுக்கு பணமாகவே வழங்குதல், இளைஞர் சமுதாயத்துக்கு முன்னுரிமை புத்திஜீவிகளுக்கு உரிய இடம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், ஊழல் மோசடிகளை ஒழிப்பதன் ஊடாக பாவனையாளர்களைப் பாதுகாத்தல், பாரிய கனிய வளங்கள் ஊடாக பொருளாதார சக்தியை அதிகரித்தல், படையினரை பொருளாதார யுத்தத்திற்கு அழைத்தல், பிரதான மற்றும் முக்கியமான கடல் வளங்களின் மூலம் நாட்டின் வளத்தை அதிகரித்தல்.

இவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 'முழு நாட்டையும் சரியான பாதைக்கு' அழைத்துச் செல்லும் வெற்றியின் கம்பத்தில் நிற்கும் சிறப்பான திட்டங்கள். இத்திட்டங்கள் அனைத்தும் நேர்த்தியாகவும் தொடராகவும் இடம்பெற்று, மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே அனைவரினதும் வேண்டுதலாகும்.



**ஸ்ரீல.சு.க மத்திய கொழும்பு அமைப்பாளர் பைஸர் முஸ்தபாவின் அழைப்பில் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை**

**ஐ.ஏ.காதிர்கான்...**

# அறுகம்பையில் மகளிர் தினம்; அரசாங்க சேவையிலுள்ள பெண்கள் பலர் பங்கேற்பு

சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தினால் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள் பொத்துவில் அறுகம்பை புளூ வேவ் ஹோட்டலில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. சுற்றுலா மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ஏ.எம்.ஜௌபர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மேஜர் ஜெனரால்(ஓய்வு) உமர் பாறுக் புர்கி, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் சுற்றுலா பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பத்மா சிறிவர்த்தன, பாகிஸ்தான் தூதுவரின் ஊடக ஆலோசகர் கல்சூன் கைசர் ஜிலானி, சுற்றுலா கைத்தொழில் மன்றத்தின் ஆலோசகர் திஸ்ஸ ஜெயவர்தன ஆகியோருடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொத்துவில் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர், ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி அனுஷியா கலந்து கொண்டு விசேட உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் உகன பாடசாலை மாணவர்களின் நடனம் இடம்பெற்றதுடன், பெண்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் ஆளுமைகளினால் கவிதைகள் வாசிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

முப்படைகளில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்கள், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட பெருமளவான பெண்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வினை மேலும் சிறப்பிக்கும் வகையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரினால் பெண்களை தலைமையாக கொண்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பத் தலைவிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மொபிடல் நிறுவனத்தினால் உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச பெண்கள் தின நிகழ்வினை சிறப்பாக நடத்துவதற்கு பூரண அனுசரனையினை தேசத்தின் குரலாக இயங்கும் மொபிடல் நிறுவனம் வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.










**றிசாத் ஏ. காதர்...**

# உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் முப்பெரும் விழா

**உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு நடத்தும் முப்பெரும் விழா நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமையும் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது.**

உலகத் தமிழ் வம்சாவளியினரின் ஒன்றுகூடலும், சாதனை படைத்த பெண்களுக்கு விருது வழங்கி கௌரவித்தலும், உலகத் தமிழ் பாராளுமன்ற நிகழ்வும் என மூன்று விழாக்களையும் முப்பெரும் விழாவாக உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு நடத்தவுள்ளது.

'உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு' இம்முறை எட்டாவது ஆண்டாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முப்பெரும் விழாவின் தொடக்க விழா நடைபெறவுள்ளது. உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான ஜெ. செல்வகுமார் இங்கு வரவேற்புரையாற்றவுள்ளார்.



உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும், உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவருமான ஜெ. செல்வகுமார்

தமிழ்நாட்டு தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆஸ்பத்திரி வைத்தியத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான், இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ வீ. மெய்யநாதன் ஆகியோர் தலைமை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

வி.ஐ.டி பல்கலைக்கழக நிறுவனர் வேந்தர் கோ. விஸ்வநாதன், வள்ளுவர் அறிவியல் மற்றும் வேளாண்மைக் கல்லூரி கே. செங்குட்டுவன், தமிழ்நாடு சுற்றுலாத்துறை முதன்மைச் செயலாளர் டொக்டர் வி. சந்திரமோகன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண் இயக்குனர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்துக்குப் பொறுப்பான எல். லியோனி, வி.ஐ.ரி. பல்கலைக்கழக துணைத் தலைவர் வி. செல்வம், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் டொக்டர் வி.பி. ஜெயசீலன், புலம்பெயர் தமிழர்களின் மறுவாழ்வு நலன் ஆணையர் ஜெயசிந்தா லாசரஸ் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

உலகத் தமிழ் பாராளுமன்றம் WORLD TAMIL PARLIAMENT

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் மலேசிய எம். சரவணன், மலேசிய துணை முதல்வர் பேராசிரியர் பி. ராமசாமி, இலங்கையின் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நியூபிரிட்டன் மாகாண அரசின் ஆளுநர் சுசீந்திரன் முத்துவேல், கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹாரி ஆனந்தசங்கரி, இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். முஹம்மட் ஹரீஸ், அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் ராஜா கிருஷ்ணமூர்த்தி, நியூசிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் வனுசி வால்டர், விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.பியான தொல். திருமாவளவன், திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராச்சாமி, இலங்கையின் ஓய்வு பெற்ற நீதியரசரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி. விக்னேஸ்வரன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சு.திருநாவுக்கரசு, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி வே. இராதாகிருஷ்ணன், நோர்வே எம்.பி கம்சாயினி குணரத்தினம், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், மக்கள் தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராசு, நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா இராதாகிருஷ்ணன் ஆகியோர் உட்பட மேலும் பல உலகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சென்னை மாநகரில் நாளை ஆரம்பம்

பன்னிரண்டாம் திகதி தமிழ் திரை நட்சத்திரங்கள் பங்குபெறும் நிகழ்வில் 2022 எடிசன் திரை விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மரு எஸ். குருசங்கர் (மீனாட்சி மிசன் தலைவர்), விளம்பரப்பிரிவு பஷீர் அஹமட் எம். அஜேகுமார், கலாநிதி எம்.என். சங்கர், மலேசிய எட்வேட் சுப்பிரமணி, இளம்பாதி கருணாகரன், லண்டன் ஜனகன், சிங்கப்பூர் அருமைச்சந்திரன், மலேசிய எஸ். தீனதயாளன், கட்டடப் பிரிவுத் தலைவர் அன்டனி ரத்னம், விளம்பர வெளியீட்டு பிரிவு கலாநிதி ஆர். சக்திவேல், கவிஞர் ரவிபாரதி, காஞ்சிபுரம் மருத்துவ பிரிவு மரு சந்தியநாராயணன், அமெரிக்க ஏ.எம். நோயல், இலங்கை எஸ். தியாகு, கனடா ஆலன் ஏ. அகிலன், மொரிஷியஸ் நித்தியானந்தா ஆகியோர் விழாக் குழுவினராக இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இந்தோனேசிய விசாகன், டொக்டர் பத்மநாதன் தலைமையில் தமிழ்நாடு அனைத்து நாதஸ்வரகவின் கலைஞர்கள் சங்கம் நடத்தும் மங்கள இசையுடன் வரவேற்பு மற்றும் போட்டி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

பாரம்பரிய கலை மற்றும் கலாசார நிகழ்வுகள் டொக்டர் பி. சந்திரமோகன் சந்தீப் நந்தூரி தலைமையில் நடைபெறும்.

தங்கம் தென்னராசு தலைமையில் தொடக்கப்படும் இவ்விழாவில், 'தமிழரும் வீர விளையாட்டும்' எனும் தொனியில் சி.வி. மெய்யநாதனும், 'ஆன்மீகமும் தமிழும்' எனும் தொனியில் பி.கே. சேரன்பாபுவும், 'புலம்பெயர்ந்த தமிழரும் வாழ்வியலும்' எனும் தொனிப்பொருளில் செஞ்சி கே.எஸ். மஸ்தானும், 'வளரும் தமிழகம் கண்காட்சி' எனும் தொனியில் வி. செந்தில்பாலாஜியும், 'தமிழரின் வளர்ச்சியில் கல்வி' எனும் தொனியில் அன்பின் மகேஸ் பொய்யாமொழியும் கருத்துக்களை பரிமாறி தமிழ்ப் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், துணை முதல்வர்கள், மேயர்கள், பல்கலைக்கழக வேந்தர்கள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இங்கு இந்திய ஆட்சிப் பணி, காவல் பணி, வெளியுறவுத்துறை பணி, விண்வெளித்துறை, விளையாட்டுத்துறை, விமானத்துறை, சமூக நலத்துறை, கல்வியாளர்கள், மருத்துவர்கள் போன்ற துறையில் சாதனை படைத்த பெண்களுக்கு சாதனை பெண்கள் விருது வழங்கப்பட உள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக உலகில் 12 நாடுகளில் தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 152 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களை நேரடியாகவும், இணைய வழியாகவும் அழைத்து உலகத்தமிழ் பாராளுமன்ற நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும், பேச்சுப்போட்டி, ஆடை அலங்காரம் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இது மருத்துவ விழிப்புணர்வு நிகழ்வாகவும் ஆடை அலங்கார நிகழ்வாகவும் நடைபெற உள்ளது. இதில் பல்வேறு மருத்துவ கல்லூரிகளின் மாணவ மாணவிகளும் மற்றும் கலை கல்லூரி, விவசாய கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களும், பிளஸ் டூ மாணவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இதில் முத்தாய்ப்பாக 'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் கண்காட்சி நடைபெற உள்ளது. அதில் தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைந்ததை பறைசாற்றும் விதமாகவும், அனைத்துத் துறை சார்ந்த அரங்கங்கள் அமைத்து காட்சிப்படுத்த உள்ளோம் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.


கலை, கலாச்சாரம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் முன்னேற்றமடைய இந்திய நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும் அயல்நாடுகளில் மக்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்யவும் இவ்வமைப்பின் மூலம் பலர் பயன் பெறுகின்றனர்.

இதுவரை இணையத்தில் நடைபெற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜ்யசபா உறுப்பினர்கள், செனட்டர்கள், தேசிய உறுப்பினர்கள் மத்திய அமைச்சர்கள், பெரும்பான்மையான உறுப்பினர்கள் நேரடியாகவும், இணையத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் 12 நாடுகளில் இருந்து 152 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர். இதன் மூலம் தாங்கள் வசிக்கும் நாட்டில் அரசாங்கத்தின் மூலம் தமிழர்களை கல்வி பொருளாதாரத்தில் எப்படி மேம்படுத்தலாம் எனவும், 12 நாட்டு அரசாங்கத்தின் உதவிகளை பெறவும், இராஜாங்க உறவை மேம்படுத்தவும் இந்த உலகத் தமிழ் பாராளுமன்றம் பேருதவியாக இருக்கும் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் உலகத் தமிழ் பாராளுமன்ற அமைப்பாளருமான செல்வகுமார் தெரிவித்தார்.

## 8 ஆவது ஆண்டாக நடைபெறும் உலகத் தமிழ் வம்சாவளியினரின் ஒன்றுகூடல்








## ஊடக அனுசரணை தினகரன், வாரமஞ்சரி





## இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர், தினகரன் மற்றும் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி சுப்பிரமணியம் தியாகு ஆகியோரும் பங்கேற்பு

## 12 நாடுகளின் 152 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும், இணைய வழியாகவும் பங்கேற்கும் உலகத்தமிழ் பாராளுமன்ற நிகழ்வு

---

# யாழ்ப்பாணத்தில் இன்று Grand Bridal Fashion Show

**'மாற்று மோதிரம்' என்ற பெயரை தெரியாமல் யாரும் இருக்க முடியாது. பிரம்மாண்டம் என்றாலே அது அருந்ததியே. பல வருடங்களைக் கடந்தும் தலைநகரைத் தாண்டியும் 'மாற்று மோதிரம்' எனும் மணப்பெண் அலங்காரக் காட்சி நிகழ்வை வெற்றிகரமாக நடத்திவருகின்றமை அருந்ததியின் தனித்துவமே.**



நாடளாவிய ரீதியில் தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்களை மையப்படுத்தி நடைபெறும் 'மாற்று மோதிரம்' மணப்பெண் அலங்காரக் காட்சி கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்றதைத் தொடர்ந்து இம்மாதம் யாழ் மண்ணில் இன்றைய தினம் மாலை 4 மணிக்கு செல்வா பலஸ் மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெறுகிறது. பல மாவட்டங்களிலிருந்தும் வருகை தரும் 50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களின் பங்கேற்போடு பல சிறப்பு அதிதிகளும், பிரதம அதிதிகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இன,மத,மொழி பேதமின்றி இந்த சமூகத்தில் சாதித்துக் கொண்டிருக்கும் அழகுக்கலை நிபுணர்கள் அனைவரையும் கௌரவிக்கும் இம்மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறவுள்ளது. ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு திருமணசேவையும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை மக்களின் மனதை வென்றுள்ளது.





பல எதிர்பார்ப்புகளோடு எதிர்பார்த்து காத்திருக்கும் யாழ் மக்களின் நல் ஆதரவோடும் அவர்களின் நன்மதிப்பை பெற்ற மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி பிரம்மாண்ட முழக்கத்தோடு யாழ் மண்ணில் அரங்கேறப் போகிறது. எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் பிரம்மாண்டத்திற்கு அழைத்துச் செல்லும் 'மாற்றுமோதிரம்' நிகழ்வு நிச்சயம் வருகை தரும் அனைவரையும் திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. யாழ் மண்ணில் இன்று அரங்கேரவிருக்கும் பிரம்மாண்ட மணப்பெண் அலங்காரக் காட்சியில் நீங்களும் இணைந்திருங்கள் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

# கிரிக்கெட் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவர் ஷேன் வோர்ன்

**ஷேன் கீத் வோர்ன் என்பதே ஷேன் வோர்னின் முழுப்பெயர். வோர்ன் 13 செப்டம்பர் 1969 இல் பிறந்தார். ஷேன் வோர்ன் முன்னாள் ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட, சுழற்பந்து வீரரும் ஆவார். கிரிக்கெட் வரலாற்றில் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளராக அகில உலகிலும் புகழ் பெற்றவர். 1994 ஆம் ஆண்டிற்கான சிறந்த துடுப்பாட்ட வீரராக விஸ்டன் துடுப்பாட்ட வீரர்களின் நாட்குறிப்பினில் குறிப்பிடப்பட்டுள்ளார். அத்துடன் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் விஸ்டன் முன்னணித் துடுப்பாட்ட வீரராக அறிவிக்கப்பட்டார்.**

2000ஆம் ஆண்டில் சேன் வோர்ன் நூற்றாண்டின் சிறந்த ஐந்து விஸ்டன் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகத் தேர்வு செய்யப்பட்டார். அனைத்து விதமான துடுப்பாட்ட வடிவங்களில் இருந்தும் 2013 ஜுலையில் தனது ஓய்வினை அதிகாரபூர்வமாக இவர் அறிவித்திருந்தார். இவர் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டிகளின் விளக்கவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.



ஷேன் வோர்ன் செப்டம்பர் 13, 1969 இல் மேல் பெரன்ட்ரீ கலி, விக்டோரியா, ஆஸ்திரேலியாவில் பிறந்தார். ஷேன் வோர்ன் 1992 இல் தனது முதலாவது தேர்வுத் துடுப்பாட்டப் போட்டியில் விளையாடினார். பன்னாட்டு ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 1,011 இலக்குகளைக் கைப்பற்றினார்.இவரது 708 தேர்வு இலக்குகள் 2007ஆம் ஆண்டு வரை தேர்வுத் துடுப்பாட்டத்தில் எந்த ஒரு பந்து வீச்சாளராலும் அதிக இலக்குகளை வீழ்த்திய சாதனையாக இருந்தது.

ஒரு பயனுள்ள கீழ்வரிசை மட்டையாளராக, இவர் 3,154 தேர்வு ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பன்னாட்டு அளவில் விளையாடியதுடன், வோர்ன் தனது சொந்த மாநிலமான விக்டோரியாவுக்காக உள்நாட்டுப் போட்டிகளிலும், எம்ப்சயர் அணிக்காக இங்கிலாந்து உள்நாட்டுப் போட்டிகளிலும் விளையாடினார். இவர் 2005 முதல் 2007 வரை மூன்று பருவங்களுக்கு எம்ப்சயர் அணித் தலைவராக விளையாடினார். 2003 பெப்ரவரியில், தடை செய்யப்பட்ட போதைப்பொருளை சோதனை செய்ததற்காக துடுப்பாட்டப் போட்டிகளில் விளையாட ஓராண்டுகால இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.அத்துடன், பந்தயப் பணயத்தொழிலர்களிடமிருந்து பணம் பெற்று விளையாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்திய குற்றச்சாட்டுகள்,பாலியல் தொல்லை உட்படக் களத்திற்கு வெளியே நடந்த அவதூறுகளால் இவரது வாழ்க்கை பாதிக்கப்பட்டது.2007 ஜனவரியில் ஆஸ்திரேலியாவின் இங்கிலாந்துக்கு எதிரான ஏஷஸ் தொடரின் வெற்றியின் முடிவில் வோர்ன் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவருடன் அணியின் மேலும் மூன்று முன்னணி வீரர்களான கிளென் மெக்ரா, டேமியன் மார்ட்டின், ஜஸ்டின் லாங்கர் ஆகியோரும் அதே நேரத்தில் தேர்வுப் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றனர், இது 'ஒரு சகாப்தத்தின் முடிவு' என்று பரவலாக அப்போது அறிவிக்கப்பட்டது.

பன்னாட்டுப் போட்டிகளில் இருந்து இளைப்பாறிய பின்னர், வோர்ன் 2007 எம்ப்சயர் அணியில் இறுதிப் பருவப் போட்டிகளில் விளையாடிய பின்னர், முதல் தரப் போட்டிகளில் இருந்து இளைப்பாறினார்.இந்தியன் பிரீமியர் லீக் (IPL)போட்டிகளில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் 2008–2011 காலப்பகுதியில் அணித் தலைவராக விளையாடியதோடு, பயிற்சியாளராகவும் பணியாற்றினார்.

1993 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் ஏஷஸ் தொடருக்கான இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு வோர்ன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறு தேர்வுத் துடுப்பாட்டப் போட்டி கொண்ட தேர்வுத் துடுப்பாட்டத் தொடரில் இவரில் மொத்தமாக 34 இழப்புகளைக் கைப்பற்றினார்.இதன்மூலம் அதிக இழப்புகளைக் கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள் வரிசையில் இவர் முதலிடம் பிடித்தார்.

சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்த பிறகு இந்தியன் பிரீமியர் லீக்கில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இவரை $450,000 மதிப்பில் தேர்வு செய்தது.ஷேன் வோர்ன் இந்த அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டார். இவரின் தலைமையில் முதல் இந்தியன் பிரீமியர் லீக்கில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. கிரிக்கெட் உலகில் ஜாம்பவானாகத் திகழ்ந்த சுழற்பந்து சிங்கம் தனது 52 வது வயதில் மாரடைப்பினால் மறைந்த செய்தி அகில உலக கிரிக்கெட் ரசிகர்களின் மனங்களில் ஆழ்ந்த துயரத்தினை பதிவு செய்தது. கிரிக்கெட் வரலாற்றில் ஷேன் வோர்னின் சரித்திரம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
*கம்பளை*

## பிரதமரின் தலைமையில்.... (03 ஆம் பக்கத் தொடர்)

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோர் ஸூம் தொழிநுட்பத்தினூடாக இப் பாடசாலைகளின் அதிபர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடினர்.

இந் நிகழ்வில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நாட்டிலுள்ள 22 மில்லியன்... (03 ஆம் பக்கத் தொடர்)

சுதந்திரம் ஜனநாயக வழியில் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமையில் சில மட்டுப் படுத்தல்கள் காணப்படுகின்றன. இந்த சட்டம் அவசியம் இல்லை என எதிர்க்கட்சியினர் கூட எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. இது தேவை என்பதே அனைவரதும் கருத்தாக உள்ளது. இதன் மூலம் எவருடைய சுதந்திரமும் கட்டுப்படுத்தப்படவில்லை அடிப்படை உரிமைகளுக்கு சுதந்திரமாகவும் அளித்ததைத் தொடர்ந்து இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஊடக மட்டுப்படுத்தல்கள் இடம் பெற்றுள்ளதாக எதிர்கட்சியினர் கூறுவதை நாம் ஏற்க முடியாது. இதில் தகவல் அறியும் உரிமை மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் நலன் புரிசெயற்பாடுகளுக்கே இதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அனுமதியின்றி விற்பனை...

ஈடுபடுபவர்கள் தொடர்பில் ஏதேனும்தகவல்கிடைக்குமிடத்து, மத்திய வங்கியின் பரிவர்த்தனை திணைக்களத்தின் 011 2398827, 011 2477375 அல்லது 011 2398568 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## பாமஸிகளுக்கான மருந்து...

மற்றும் இறக்குமதியாளர்கள் நேற்று முதல் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகிப்பதை நிறுத்த ஆலோசித்து வருவதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் (ACPPOA) தலைவரான சந்திக கங்கந்த தெரிவித்துள்ளார்.

மருந்து நிறுவனங்களும் இறக்குமதியாளர்களும் தங்களிடம் இருக்கும் இருப்புகளிலிருந்து மருந்தகங்களுக்கு விநியோகிப்பதை ஏற்கனவே நிறுத்திவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். ரூபாய் மதிப்பீட்டின் பின்னர், அந்த மருந்து விற்பனையாளர்கள் இலாபம் ஈட்ட முடியாது.

பெரும்பாலான மருந்து வகைகள் மற்றும் பொருட்கள் கடனில் இறக்குமதி செய்யப்படுகிறது.

எனவே, குறைந்த விலையில் அவற்றை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யும் போது உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் பாரிய நட்டத்தை சந்திக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிசொகுசு விசேட...

ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை இலங்கைக்கான முதலாவது உல்லாச கப்பல் சேவை என அச்சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சேவையின் முதலாவது பயணம் சென்னையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், குறித்த கப்பலில் தங்கும் அறை வசதி முதல் பயணிகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முக்கிய அம்சமாக இக்கப்பலில் பயணிக்க விரும்பும் பயணிகள் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது அவசியம் எனவும் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பி.சி. ஆர் பரிசோதனை அறிக்கையையும் பயணிகள் கைவசமிருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## எரிபொருள் – மின் பாவனையை...

பாவனை கட்டுப்படுத்தப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக வழங்கப்படும் மேலதிக எரிபொருள் கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கூட்டங்கள் மற்றும் பிற நோக்கங்களுக்காக வெளிமாவட்ட அதிகாரிகளை கொழும்புக்கு அழைப்பதை மட்டுப்படுத்தவும் சுற்றறிக்கையினூடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றறிக்கையில் மேலும் சில அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மின் தூக்கி பாவனையை குறைத்து முடிந்தளவு படிக்கட்டுகளை உபயோகித்தல்.

மின் தூக்கியில் ஒருவர் மாத்திரம் பயணிப்பதை தவிர்த்து, சுகாதார வழிகாட்டலுக்கேற்ப பயணிக்கக்கூடிய உச்ச நபர்களின் எண்ணிக்கையுடன் பயணித்தல்.

ஊழியர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள சந்தர்ப்பங்கள் வளிசீராக்கி பாவனையை தவிர்த்து மின் விசிறிகளை உபயோகித்தல். அலுவலகங்களில் ஊழியர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அனைத்து மின்விளக்கு, மின்சாதனங்களை அணைத்தல்.

பிற்பகல் 2.30 முதல் பி.ப 4.30 வரை வளி சீராக்கியின் செயற்பாட்டை இடைநிறுத்தல்.

காலை வேளையில் வெளிபுறச் சூழல் வெப்பநிலை குறைவு என்பதால் ஜன்னல்களை திறந்துவைத்து, வெளிபுற காற்றோட்டத்திலிருந்து பயன்பெற்று ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வளிசீராக்கியை செயற்படுத்தல் உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## மாற்றுக் கருத்துகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், தனிப்பட்ட தரவுகளை பாதுகாப்பது அவற்றை டிஜிட்டல் மயமாக்குவது நல்ல வேலைத்திட்டம். என்றாலும் இந்த சட்டமூலம் ஊடாக தனிநபர் சுதந்திரம், உரிமையின பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுமென பலதரப்பினராலும் சந்தேகம், அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த சட்டமூலம் காரணமாக ஊடக சுதந்திரம், தகவல் அறியும் உரிமைக்கு பாதிப்பு ஏற்படுமென சந்தேகமும் உள்ளது.

டிரான்பரன்சி இண்டர்நெஷனல் நிறுவனம், இளம் சேவையாளர்களின் சங்கம் இந்த சட்டமூலம் தொடர்பில் தெளிவானதொரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன. அதனால் இந்த சட்டமூலத்துக்கு எதிரான கருத்து இருப்பவர்களுடன் அரசாங்கம் கலந்துரையாட பின்வாங்கக் கூடாது. இந்த சட்டமூலத்தை இன்னும் சில காலத்துக்கு ஒத்திவைத்து அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இந்த சட்டமூலத்தை செயற்படுத்த ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அமைய அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரசபையின் சுயாதீன தன்மை தொடர்பில் பல அமைப்புகளாலும் விமர்சிக்கப்படுகின்றன என்றார்.

## வெளிவிவகார... (03 ஆம் பக்கத் தொடர்)

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் சுற்றறிக்கையை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ளது.அரச ஊழியர்கள் என்பவர்கள் மக்கள் சேவையாளர்கள். அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பணியாற்றி வருகிறார்கள்.

எனவே அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் நிறுத்தும் அறிவிப்பு அரச ஊழியர்களுக்கு பெரும் சுமையாகவும் ஏமாற்றமாகவும் உள்ளது. எனவே அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

## கிராம மாணவர்களின்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆவது திருத்தத்தை செயற்படுத்துவதாக அரசு இந்தியாவுக்கு உறுதியளித்தது, இந்த நிலையில் மாகாண பாடசாலைகளை சுவீகரிப்பது நியாயமா என்று வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

இவர்களது ஆட்சியில் விஜேமுலொகுபண்டார பல நூறு பாடசாலைகளை சுவீகரித்தார். அதில் தவறு கிடையாது. கிராம மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அதனை செய்வது தவறு கிடையாது.பேச்சு வார்தை ஊடாக இதனை மேற்கொள்ளலாம். முன்பு போன்று வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பாடசாலைகளை சுவீகரிக்க முடியாது என்றார்.

## கொவிட் PCR சோதனை...

பதிலளித்துள்ளது.

கொவிட் தொற்று உறுதியாளர் எண்ணிக்கை வீழ்ச்சியுடன் பரிசோதனை எண்ணிக்கையும் குறைவது வழமையானது என சுகாதார மேம்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ரஞ்சித் படுவன்துடாவ தெரிவித்துள்ளார்.

பீ.சீ.ஆர் மற்றும் என்டிஜன் பரிசோதனைகளுக்கு கேள்வி நிலைமை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் மரணங்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், பூஸ்டர் தடுப்பூசி 50 வீத மானவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ள காரணத்தினால் மரணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## டொலருக்கான மேலதிக கொடுப்பனவு...

வங்கிகளுக்கு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர், தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுப்பதற்காக, மத்திய வங்கியினால் டொருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நெகிழ்வுத் தன்மைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி நேற்றைய தினம் 225 ரூபா 20 சதமாகவும், விற்பனைப் பெறுமதி 229 ரூபா 99 சதமாகவும் பதிவாகி இருந்தது.

இதற்கமைய, வெளிநாட்டுப் பணியாளர்களினால் இலங்கைக்கு அனுப்பப்படும் அமெரிக்க டொலருக்காக வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட 8 ரூபா மேலதிக கொடுப்பனவுடன், அவர்களுக்கு டொலர் ஒன்றுக்காக 238 ரூபா அளவில் கிடைக்கும்.

எனவே, வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பும் டொலர் ஒன்றுக்கு 8 ரூபா வீதம் மேலதிக கொடுப்பனவு வழங்காதிருக்க மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தீர்மானித்துள்ளார்.

## பொய் கூறி ஆட்சியை...

தாக்கி, படுகொலை செய்து ஊடக சுதந்திரத்தை இல்லாதொழித்த எதிர்க்கட்சியினர் இன்று ஊடக சுதந்திரம் பற்றி பேசுவது விந்தையானதெனவும் அவர் சபையில் தெரிவித்தார். நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடியை அரசியலாக்கிக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு எதிர்க்கட்சியினர் முழு மூச்சாக செயற்பட்டு வருகின்றனரென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், நேற்று இலங்கை வந்தார். யாழ்/ஆதிமயிலிட்டி காசி பூதனார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த அவரை அகில இலங்கை இந்து மாமன்ற பிரதித்தலைவர் கலாநிதி சின்னத்துரை தனபாலா விமான நிலையத்தில் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து வரவேற்பதையும் அருகில் சொற்பொழிவாளர் ந.சித்தாந்த ரத்தினம் ந. தங்கராசா நிற்பதையும் காணலாம்.

## ஜனாதிபதியின் மாமியார்...

கலிபோர்னியாவில் வசித்து வந்தார். அன்னார் இலங்கையிலும் அமெரிக்காவிலும் நன்கு அறியப்பட்ட சமூக சேவகியாக திகழ்ந்தார்.

லூகாஸ் பீரிஸை (காலஞ்சென்ற) மணந்த பத்மாதேவி பீரிஸ் இரண்டு பிள்ளைகளின் தாயாராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச அதிகாரிகளுக்கான...

சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கு மாதாந்தம் உரித்தாகும் 225 லீற்றர் எரிபொருளுக்கு மேலதிகமாக விசேட கடமைக்காக செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தற்காலிகமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடமைகளுக்கான எரிபொருள் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதால் தூர இடங்களில் இடம்பெறும் கலந்துரையாடல்களை முடிந்தளவு சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்துமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## உலகிலேயே ஆதிமொழி...

தொனிப் பொருளில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், குச்சவெளி, தம்பலகாமம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாதர் சங்கங்கங்கள், பெண்கள் அமரா சமாஜ உறுப்பினர்கள், இளையோர் உள்ளிட்டோர்களுக்கு மொழியின் அவசியத்தை வழியுறுத்தும் கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை திருகோணமலை ஜூப்லி மண்டபத்தில் இடம்பெற்றபோது முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

சிங்கள மொழி என்பது தனித்துவமான மொழியாகும். இது எமது நாட்டில் மாத்திரமே பேசப்படுகின்றது. இதனால் தனித்துவமான எமது நாட்டுக்குரிய மொழியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

எமது நாட்டில் இடம்பெறுகின்ற சில பிரச்சினைகளுக்கு மொழியும் ஒரு காரணமாக காணப்படுகின்றது. இதனால் சிங்கள மொழி பேசுவோர் தமிழையும், தமிழ்மொழி பேசுவோர் சிங்கள மொழியையும் கற்றுக் கொள்வோமாக இருந்தால் சில பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியும்.

எனவே எமது நாட்டை முன்னோக்கி நகர்த்த மொழி ரீதியான முரண்பாடுகளை களைந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் மேலும் தெரிவித்தார்.

## ரஷ்யா, வடகொரியா, சீனா...

நல்லிணக்க நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நேற்று முன்தினம் பேசிய ரஷ்யா, அதிகமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை உறுப்பு நாடுகளை நோக்கி மேற்குலகின் அரசியல் உத்திகளை நடைமுறைப்படுத்த ஒரு கட்டுப்படுத்தப்பட்ட பொறிமுறையாக ஐ.நா. மாறுவதாக பெலாரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இதனை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கை மற்றும் பெலாரஸ் தொடர்பான அறிக்கைகள் காட்டுவதாகவும் அது தெரிவித்துள்ளது. அத்தோடு போருக்கு பிந்திய இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முயற்சிகளை தாம் பாராட்டுவதாகவும் பெலாரஸ் அறிவித்துள்ளது.

இதேவேளை, பல சவால்களுக்கு மத்தியிலும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நேர்மையான முயற்சிகளை பாராட்டுவதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பிரச்னைகளை அரசியலாக்குவதையும், மனித உரிமைகள் என்ற சாக்குப்போக்கில் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும் தாம் எப்போதும் எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

## ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும்...

அமைச்சரும் டிஜிட்டல் தொழில்நுட்பம், தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இது, தகவல் அறியும் சட்டத்துக்கு அப்பால் செல்லும் ஒரு சட்டமல்ல என்று குறிப்பிட்ட அவர், ஊடக அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடியே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது. ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் ஒரு சரத்தாவது இதில் இருந்தால் முன்வைக்குமாறு அவர் எதிரணிக்கு சவால் விடுத்தார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்ட மூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2019 ஆம் ஆண்டு இந்த சட்டமூலம் சமர்ப்பிக்க யோசனை முன்வைக்கப்பட்டது. பொது மக்களுக்கும் துறைசார்ந்தவர்களுக்கும் தமது கருத்துக்களை முன்வைக்க ஏழு தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டன. 2019 மார்ச் முதல் பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

எதிர்ப்பை முன்வைக்க 02 வாரங்கள் அவகாசம் இருந்ததோடு அக்காலப்பகுதியில் நீதிமன்றம் செல்லவும் வாய்ப்பிருந்தது.

02 வாரம் கடந்து இருவர் நீதிமன்றம் சென்றிருந்தனர். அனைத்து வெளிப்படைத் தன்மையுடன் இதனை முன்வைத்துள்ளோம்.

நீதிமன்றம் செல்ல மறந்ததாக மயந்த திசாநாயக்க நேற்றை கூட்டத்தில் பங்கேற்றபோது தெரிவித்தார். அவர் நல்ல பல கருத்துக்களை முன்வைத்தார்.

அனைத்து அரச துறைகளையும் கணினி மயப்படுத்தவும் பிரஜைகள் சேவைகள் கணினி மயப்படுத்தவும் நோக்காகக் கொண்டே தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்படுகிறது. உலகில் அநேக நாடுகளில் அரச பொறிமுறை கணினி மயப்படுத்தப்படாததால் குறைபாடுகள் ஏற்பட்டன. டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை முன்னெடுக்க 30 மாத திட்டம் தயாரிக்கப்பட்டது. அதில் சட்ட குறைபாடுகள் உள்ளன. அவற்றை சீர் செய்யாது இதனை முன்னெடுக்க முடியாது. தரவு தொடர்பில் உலக அளவில் பேசப்படுகிறது. எமது நாட்டின் எதிர்காலத்திற்காக இதனை பயன்படுத்த வேண்டும்.தரவுகளை பாதுகாக்க தேவையான சட்ட பின்னணி ஏற்படுத்த வேண்டும். வங்கிகளுக்கோ தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கோ தரவுகளை வழங்கினால் எவ்வாறு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கான பாதுகாப்பே இந்த சட்டமூலத்தினூடாக வழங்கப்படுகிறது.

டிஜிட்டல் மயமாக்கலுக்கு இவ்வாறான சட்டமூலங்கள் அவசியமானவை. டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடப்படுகிறது.

விரைவில் அதனை கொண்டு வருவோம். பிரஜைகள் சேவைகள் வழங்கும் மேடையாக இந்த மாற்றங்கள் அமையும்.

அனைத்து பிரஜைகளும் தமது விபரங்களை கிராம சேவகர்களுக்கு வழங்குகிறோம். அந்த தரவுகளுக்கு என்ன நடக்கிறது? அது பற்றி யாருக்கும் தெளிவு கிடையாது. நீதிமன்றம் சென்று வழக்கு தொடரவும் முடியாது. இதற்கு டிஜிட்டல் மயமாக்கலே ஒரே தீர்வு.

பிரதேச சபைகள் உள்ளூராட்சி நிறுவனங்களிலும் டிஜிட்டல் மயமாக்கல் மேற்கொள்ள இருக்கிறோம். கடவுச்சீட்டு,அடையாள அட்டை ,கிராம சேவகர் அறிக்கை,பொலிஸ் அறிக்கை பெற வரிசையில் இருக்கும் நிலை மாற்றப்படும். வெளிநாடு செல்வதற்கு பல இடங்களுக்கு சென்று பல மாதங்கள் காத்திருக்க வேண்டும்.இதனை சில மணி நேரங்களில் விரல்களை தட்டி மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட வேண்டும்.

இந்த சட்டம் தகவல் அறியும் சட்டத்தை மீறிச் செல்லாது.அத்தோடு ஊடகவியலாளர்களின் உரிமைகளை தடுக்கும் வகையில் இந்த சட்டமூலம் அமையாதென்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறோம்.

18, 20 மாதங்களில் பின்னர் தரவு செயற்பாட்டு நிறுவனத்தின் ஊடாக தேவையான ஒழுங்குமுறைகள் முன்வைக்கப்படும். மக்களின் கருத்து பெற்றப்பட்ட பின்னர் அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னரே இந்த நிறுவனம் செயற்படும். இதற்கான உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். அதற்கான தகைமைகளும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.இந்த சட்டத்தின் கீழ் மக்களின் தனித்துவம் பேணப்படும். தரவுகளை யார் பயன்படுத்தலாம் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது தரவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் பொறுப்பு கூறுவதாக இருந்தால் எந்தச் சட்டம் வந்தாலும் பிரச்சினை கிடையாது. அநேகமான ஊடகவியலாளர்கள் நேர்மையாக செயற்படுகிறார்கள் என்றார்.

## தமிழர்களுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருடன் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பின் போது, அரசியல் தீர்வு விடயங்கள், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் வகிபாகம், அரசியலமைப்பு உருவாக்கம் ஆகிய விடயங்கள் குறித்தே முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் மூலமாக தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் எனவே அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்காவின் கூடுதல் அழுத்தம் இருக்கவேண்டும் என்றும் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

ஆகவே தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தேனும் இலக்குகளை அடைய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சம்பந்தன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் கேட்டுக்கொண்டார்.

## சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர்...

ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் கோரினார். பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டது. அதனுடன் தொடர்புள்ள புள்ளி விபரங்களையும் வழங்குமாறு கோருகிறோம்.

பிரதான அறிக்கையில் திருத்தம் செய்ய வேண்டுமென மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அது தொடர்பான ஆவணங்களையும் வழங்க வேண்டும். அவற்றை சபையில் சமர்ப்பிக்குமாறு கோருகிறோம்.

அது தொடர்பில் விவாதம் நடத்த முடியும். சர்வகட்சி மாநாடு நடத்துவதாக கூறப்பட்டுள்ளது. முன்கூட்டி சமர்ப்பித்தால் அவற்றில் ஆராய்ந்து எமது யோசனைகளை முன்வைக்கலாம் என்றார். இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, அறிக்கை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் சர்வ கட்சி கூட்டம் நடைபெறலாம்.

அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். அதனை மறைக்கத் தேவையில்லை. கட்சித் தலைவர்களுக்கு அதனை வழங்க முடியும். சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர் வழங்குவோம் என்றார்.

## அரசுக்கு ஒத்துழைப்பு...

தயார் என ஐக்கிய மக்கள் சக்தி எம்பி, வே.இராதாகிருஷ்ணன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்திற்கு 05 புதிய பிரதேச செயலகங்கள் கடந்த அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையிலும் இதுவரை அது வழங்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை,யுனிக் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் பெருமளவு மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கூட இல்லாத நிலை காணப்படுகிறது.

அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் மலையக மக்கள் பெரும் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத நிலை காணப்படுகின்றது. ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களால் முடியாமல் உள்ளது. அதற்கான வாய்ப்புகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேவேளை 2019ம் ஆண்டு பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட

நுவரெலியா மாவட்டத்திற்கான 5 பிரதேச செயலகப் பிரிவுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அப்போது பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்பட்ட காலி மாவட்டத்திற்கான மூன்று பிரதேச செயலகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் ஏழு இலட்சம் மக்கள் வாழும் நிலையில் ஐந்து பிரதேச செயலகங்களே உள்ளன. 14 ஆயிரம் பேருக்கு ஒரு கிராம சேவகர் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் அங்கு காணப்படுகிறது.

எமது மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டும். பாரபட்சமற்ற விதத்தில் அரசாங்கம் செயற்பட்டால் நாம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கத்தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் உலகளாவிய வேலை வாய்ப்புகளுக்கான கதவைத் திறக்கும் Emapta

பிலிபைன்ஸ் நாட்டை தளமாகக் கொண்ட, அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான கடல்சார் பணியாளர் நிறுவனமான Emapta, அண்மையில் இலங்கையில் தமது அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தது. நிறுவனத்தின் உலகளாவிய விரிவாக்கமானது உள்நாட்டு தொழிலாளர்களை உலகெங்கிலும் உள்ள சிறந்த வணிகங்களுடன் இணைக்கும் வேலை வாய்ப்புக்களைத் தொடங்குகிறது.



அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள பல்வேறு தொழிற்துறைகளில் இருந்து 460க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இந்நிறுவனம் தமது சேவைகளை வழங்குவதால் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மிகப்பெரிய அளவில் காணப்படுவதாக நுஅயிவய வின் நிறுவுனர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான டிம் வோர்பச் தெரிவித்தார்.

“இலங்கையின் திறமைகள் சர்வதேச வெளிப்பாட்டிற்கு ஏற்றவாறு முதிர்ச்சியடைந்துள்ளதாக நான் நம்புகின்றேன். உள்நாட்டு தொழிலாளர் சக்தியை சர்வதேச சமூகத்துடன் இணைக்கவும், தொழில் வளர்ச்சிக்கான அவர்களின் பயணத்தில் அவர்களுக்கு தேவையான எல்லா வழிகளிலும் ஆதரவளிக்கவும் Emapta இங்கு காத்திருக்கிறது.” என டிம் தெரிவித்தார்.

Emapta வின் இலங்கைக்கான முகாமையாளர் திரு. மனோ ஜெயச்சந்திரன் தலைமையிலான முக்கிய குழு, கொழும்பு குயின்ஸ் வீதியில், இல. 31 இல் அமைந்துள்ள சொகுசு கூட்டுத் தொழில் நிறுவனமாக தமது அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தது.




## 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள LINDEL

இலங்கையின் முதல் தனியார் துறைக்கு சொந்தமான மற்றும் இயக்கப்படும் தொழிற்பேட்டை நிறுவனமான, Lanka Industrial Estates Limited (LINDEL), 2022 இல் தனது 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது.

LINDEL நிறுவனமானது அதன் ஆரம்ப காலத்தில் இருந்து நாட்டின் முதன்மையான தொழில்துறை உள்கட்டமைப்பு தீர்வுகள் வழங்குனராக உருவெடுத்துள்ளதோடு தற்போது கட்டுமான இரசாயனங்கள், விவசாயம், அலுமினியம், மசகுப்பொருட்கள், பொதியிடுதல், FMCG, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி, கல்வனைஸ் படுத்தல் மற்றும் steel fabrication உள்ளிட்ட பல்வேறு தொழில் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 35 க்கும் மேற்பட்ட பிரிவுகளின் பிரதான நிறுவனமாக உள்ளது.

சபுகஸ்கந்தவில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள LINDEL நிறுவனமானது அதன் குத்தகைதாரர்களுக்கு தொழில்துறை நடவடிக்கைகளுக்கு பொருத்தமான இடவசதிகளை வழங்குகிறதோடு, பல சர்வதேச தரங்களுடன் இலங்கையின் மிக உயர்ந்த தரத்தை அடைய ஏற்றவாறு விரிவான தொழில்துறை உள்கட்டமைப்பு தீர்வுகளை அவர்களுக்கு வழங்குகிறது. LINDEL என்பது DFCC Bank PLC மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இடையிலான வெற்றிகரமான அரசதனியார் பங்காளித்துவத்தின் விளைபொருளாகும்.

## SLT-MOBITEL இன் தேசிய மர வளர்ப்புத் திட்ட இரண்டாம் கட்டம் உமந்தாவவில் முன்னெடுப்பு





தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தேசிய நாட்டிலுப்பை மர நடுகைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மெல்சிறிபுர, மதபொல பிரதேசத்தைச் சேர்ந்த உமந்தாவ சர்வதேச பௌத்த கிராமத்தில் அண்மையில் ஆரம்பித்திருந்தது. வளியின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் காலநிலை மாற்றத்தை தடுத்து, நிலைபேறான எதிர்காலத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டத்தை SLTMOBITEL முன்னெடுக்கின்றது.

இந்த நடவடிக்கையில் SLTMOBITEL சார்பாக அதன் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களான, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணத்துக்கான SLT பொது முகாமையாளர் சமந்த ஜயசிங்க, சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி, வட மேல் (கிழக்கு மாகாணம்) பிரதி பொது முகாமையாளர் பந்துல விதாரம, சந்தைப்படுத்தல் செயற்படுத்தல்கள் பிரதி பொது முகாமையாளர் ஆன் பெர்னான்டோ, மொபிடெல் பிராந்திய முகாமையாளர் ரன்மல் பொன்சேகா மற்றும் மாவட்ட முகாமையாளர் நிரோஷா கருணாரட்ன ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

**லங்கா அஷோக் லேலண்டின்**

## வர்த்தக வாகனங்களுக்கு அசல் உபகரணமாக சியெட் டயர்கள் தெரிவு



உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆயிரம் அஷோக் லேலண்ட் கனரக ட்ரக் வாகனங்களுக்கு வருடாந்தம் சியெட் டயர்கள் பொருத்தப்படவுள்ளன.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் புத்தாண்டில் ஒரு பதிய அத்தியாயத்தை தொடங்கி உள்ளது, இந்தியாவின் அஷோக் லீலண்ட் நிறுவனத்துடன் கூட்டாண்மை அடிப்படையில் செயற்படும் லங்கா அஷோக் லீலண்ட் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் உள்ளூரில் ஒருங்கிணைக்கும்; கனரக ட்ரக்குகள், டிப்பர்கள் மற்றும் இலகு ரக வர்த்தக வாகனங்களுக்கு டயர்களை விநியோகிப்பதற்கான நியமனத்தைப் பெற்றுள்ளது. இது தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் கீழ் ஒன்பது அளவுகளிலான சியெட் டயர்கள் அஷோக் லேலண்டின் 1800 வாகனங்களில் பொருத்தப்படவுள்ளன. பனாகொடை மற்றும் ஹோமாகம ஆகிய இடங்களில் உள்ள அதி நவீன வசதிகளைக் கொண்ட உற்பத்தித் தளங்களில் வருடாந்தம் இவை பொருத்தப்படவுள்ளன. இவற்றுள் ஆயிரம் வாகனங்கள் கனரக ட்ரக் வாகனங்களாகும். இவை முதல்

2021 நவம்பரில் சியெட் நிறுவனம் இலங்கையில் மகேந்திரா அன்ட் மகேந்திரா இந்தியா நிறுவனம் ஐடியல் மோட்டர்சுடன் இணைந்து ஒன்றிணைக்கும் பொலேரோ சிற்றி பிக்அப் வாகனத்துக்கான உடன்படிக்கையிலும் இணைத்துக் கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் Meta

சர்வதேச மகளிர் தினத்தினையும் #BreakTheBias எனும் அதன் தொனிப் பொருளையும் கௌரவப்படுத்திடும் நோக்கத்துடன் முன்பு Facebook company என அழைக்கப்பட்ட Meta இலங்கை உட்பட ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள பெண் தொழில்முனைவோர் மற்றும் சமூகத்தலைவர்களைக் கொண்டாடுகின்றது.

கொவிட் 19 பெருந்தொற்றானது பெண்களது வாழ்வில் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. Global State of Small Business Report எனும் அறிக்கையின் படி பெண்கள் தலைமையிலான சிறு வணிகங்கள் ஆண்கள் தலைமையிலான வணிகங்களை விட விற்பனையில் அதிகமான வீழ்ச்சியினைக் கண்டதுடன் பல வணிகங்கள் மூடப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அவ்வாறு மூடப்பட்ட பெண்கள் தலைமையிலான சிறு வணிகங்கள் 20% ஆகவும் மற்றும் ஆண்கள் தலைமையிலான வணிகங்கள் 16% ஆகவும் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை பெண்கள் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்தாலும், மற்றவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும், அவர்களது சமூகங்களில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தவும் ஒன்லைனில் ஒன்றிணைந்து வருகின்றனர். Meta ஆய்வின் படி பெருந்தொற்றின் பின்னர் இலங்கையில் 60%க்கும் அதிகமான பெண்கள் தலைமையிலான வணிக பக்கங்கள் Facebook இல் அமைக்கப்பட்டன. மேலும் பெண்களுக்கு சொந்தமான Instagram வணிகங்களின் அதிகரிப்பு 75% ஐ விடவும் உயர்ந்தது. 2021ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் இலங்கையில் தொழில்முனைவோர் தொடர்பான Facebook குழுக்களில் 50% மானவை பெண்களால் உருவாக்கப்பட்டவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுகளில் ஆசிய பசுபிக் இல் உள்ள 20,000 பெண் தொழில்முனைவோருக்கு 275க்கும் அதிகமான பயிற்சி அமர்வுகளை நடத்திட 18 சமூக நிறுவனங்கள் மற்றும் அரச பங்காளர்களுடன் Meta கூட்டு சேர்ந்துள்ளது. இலங்கைப் பெண்களின் வணிகங்களில் ஷொப்பிங் செய்திட இலங்கையில் உள்ள அனைவரையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் Facebook மற்றும் Instagram இல் உள்ள #BuyFromHer கம்பெயினில் பங்கேற்க மக்களை ஊக்குவிக்கின்றது.

**மக்கள் கஷ்டப்படும் இந்த நேரத்தில்**

## இராஜாங்க அமைச்சர்கள், ஆளும் தரப்பு எம்பிக்கள் வாய் திறக்காமலிருப்பது ஏன்?

**சாணக்கியன் சபையில் கேள்வி**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஆளும் தரப்பிலுள்ள அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் தமது அரசியலுக்காக மக்களுக்காக எதுவும் பேசாமல் மௌனம் காப்பதாக இராசமாணிக்கம் சாணாக்கியன் எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றித்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,

தமது மக்கள் கஷ்டப்படுகையில் வெளியில் வந்து அது பற்றிப் பேச ஆளும் தரப்பிலுள்ள இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களுக்கு ஏன் முடியாது?

வடக்கு, கிழக்கில் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. மக்கள் கஷ்டத்தில் மௌனம் காக்கிறார்கள். மின்சாரமின்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஆனால் அது பற்றி வாய்திறக்கவில்லை. தங்களில் சுயலாபத்துக்காகவே இவர்கள் வந்துள்ளனர்.

பிரேமினி என்ற பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டார். மகளிர் தினத்தில் அதுபற்றி குறிப்பிடுகின்றேன். வட்டாரத்தில் வென்ற ஒருவருக்கு 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த பணத்தையும் செலவிட உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயன்படுத்த முடியாதுள்ளது. ஆளுநரிடமும் அது பற்றி எடுத்துரைத்தோம்.

வட்டார உறுப்பினர்களுக்கு முன்மொழிய சந்தர்ப்பம் வழங்குவதாக அவர் உறுதியளித்தார். அரசியலுக்காக மக்களுக்காக எதுவும் பேசுவதில்லை.

**அரசு ஜெனீவாவுக்கு பதிலளிக்கும் வரை:**

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவுக்கு எம்.பிக்களை அழைப்பதில் பயனில்லை

**ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு தொடர்பில் ஜெனீவாவில் அரசாங்கம் பதிலளிக்கும் வரை ஆணைக்குழுவுக்கு ஆஜராகும்படி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதில் பயனில்லையென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உபாலி அபேரத்ன தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுகின்றனர்.

எனினும் ஜெனீவா மனித உரிமை பேரவையில் இந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பிலான சட்டரீதியிலான தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதுடன் அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கும்வரை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை விசாரணைக்கு அழைப்பதில் பயனில்லை என்றும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வரப்பிரசாத கூற்று ஒன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு நான் உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் பாராளுமன்ற அமர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பதற்காக எனது சட்டத்தரணி ஊடாக அதுதொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளேன்.



ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த பாதுகாப்பு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும். பாராளுமன்றம் கூட்டப்படும் திகதிகள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கருத்துக்களை பெற வேண்டுமானால் ஒரே சந்தர்ப்பத்தில் அனைத்து உறுப்பினர்களையும் அழைக்காமல் தேவைக்கு ஏற்றவகையில் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்டம் கட்டமாக ஆணைக்குழுவுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி அரசியல் பழிவாங்கல் தொடர்பான இந்த ஆணைக் குழுவை 2021 ஜனவரி 29 வர்த்தமானி அறிவிப்பு மற்றும் 2021 ஏப்ரல் 1ஆம் திகதி வர்த்தமானியின் அடிப்படையிலேயே நியமித்துள்ளார்.

எனினும் அதன் அடிப்படையானது இதற்கு முன்பிருந்த உபாலி அபேரத்ன தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவானதாகும். எனினும் தற்போது இந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஜெனீவா மனித உரிமை பேரவை கேள்வி எழுப்பியுள்ளது.

அதுதொடர்பிலான சட்டரீதியிலான பல கேள்விகளுக்கு பதிலளிக்கவேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது. அத்துடன் இந்த பிரச்சினை எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை செல்லும் என்றே நினைக்கின்றேன். இந்த அறிக்கை அடிப்படையாகக்கொண்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பின் செல்லுபடித்தன்மை என்ன என்பது பார்க்கவேண்டி இருக்கின்றது.

ஆணைக்குழுவின் அறிக்கையை எடுத்துக்கொண்டு நபர்களை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைப்பது எவ்வாறு என்பதை அரசாங்கம் தெரிவிக்கவேண்டும். அத்துடன் இதுதொடர்பில் சர்வதேச பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கப்படும்.

அதனால் அரசாங்கம் இதுதொடர்பில் பதிலளிக்கும்வரை இந்த ஆணைக் குழுவை செயற்படுத்த முடியாது. உபாலி அபேரத்னவுக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் கடந்த மாத அறிக்கையிலும் இதற்கு முன்னரான அறிக்கையிலும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இவ்வாறான நிலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முன்னால் கொண்டுசென்று கேள்வி கேட்பதில் பயன் இல்லை. அதனால் வெளிவிவகார அமைச்சரும் நீதியமைச்சரும் இதுதொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு விவேகானந்தாவில் மகளிர் தின நிகழ்வுகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர்சங்கத்தின் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கல்லூரி அதிபர் திருமதி. சி. ரவிச்சந்திரிக்கா தலைமையில் நடைபெறவுள்ளது. கொட்டாஞ்சேனையிலுள்ள கல்லூரி வளாகத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 வரை பல்வேறு மனங்கவர் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதுடன் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. பழைய மாணவிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டிகளும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது. நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அனைத்து மகளிருக்கும் கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்க மகளிர் பிரிவு அழைப்பு விடுக்கின்றது.


திகதி 08.03.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4700
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,896,820.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 0 9 7 4 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,344,109.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1048
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,766,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 240,096,710.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து L சுப்பர் இலக்கம் 23 வெற்றி இலக்கங்கள் 01 38 39 46

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 730
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,732,880.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 11 24 38 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 101,248,699.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனில் ரஷ்யாவின் முற்றுகையிலுள்ள நகரங்களில் புதிய மனிதாபிமானப் பாதை

### அகதிகள் 2 மில்லியனைத் தொட்டது

உக்ரைனில் முற்றுகையில் இருக்கும் நகரங்களில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கு ரஷ்யா நேற்றும் புதிய மனிதாபிமானப் பாதைகளை அமைத்தது.

ரஷ்யப் படைகள் ஷெல் தாக்குதல்களை நடத்தி வரும் ஐந்து நகரங்களில் இருந்து பொதுமக்கள் வெளியேற வழி அமைக்கப்பட்டிருப்பதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. எனினும் ரஷ்யா உண்மையாக பொதுமக்களை வெளியே அனுமதிப்பதில்லை என்று குற்றம்சாட்டி இருக்கும் உக்ரைன் கடந்த செவ்வாய்க்கிழமையும் அவ்வாறான மனிதாபிமானப் பாதை மீது குண்டு வீசியதாகக் கூறியது.



“இவ்வாறான செயற்பாடு இனப்படுகொலையைத் தவிர வேறு இல்லை” என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மிகப்பெரிய அகதிகள் பிரச்சினையை உருவாக்கி இருப்பதோடு, இதற்கு பதிலடியாக மேற்குலக நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

ரஷ்யாவுடன் போராடுவதற்கு மேலும் உதவி தேவைப்படுவதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி முறையிட்டுள்ளார். ரஷ்யப் படை உக்ரைனில் பயங்கர தாக்குதல்களை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

இந்நலையில் தலைநகர் கியெவ், துறைமுக நகர் மரியுபோல் மற்றும் கார்கிவ், சுமி மற்றும் செர்னிஹிவில் புதிய மனிதாபிமானப் பாதைகள் நேற்று திறக்கப்பட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த மோதல் காரணமாக உக்ரைன் நாட்டில் இருந்து வெளியேறி இருக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியனாக அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்த மனிதாபிமான பாதை வழியாக பலரும் தப்பிச் சென்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு நகரான சுமியில் இருந்து குறைந்து 5,000 பேர் வெளியேறி இருப்பதாக உக்ரைன் அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர். இந்த நகரில் இடம்பெற்ற கடும் மோதல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 21 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தலைநகர் கியேவின் வெளிப்புற பகுதியில் இருந்து வெளியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும் துறைமுக நகரான மரியுபோலில் இருந்து மக்களை வெளியேற்றும் முயற்சி பல தடவைகள் தடங்கலுக்கு உள்ளாகியது. இங்கிருந்து சிறுவர்கள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் வெளியேற ரஷ்யா மறுத்ததாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது.

“இந்த நிலைமை உண்மையில் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தி இருப்பதோடு நிலைமை மேலும் மோசமடைந்து வருகிறது” என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பேச்சாளர் எவான் வொட்சன் தெரிவித்துள்ளார்.

ஆறு வயது சிறுமி ஒருவர் தனது வீட்டின் இடிபாடுகளுக்குக் கீழ் நீரிழப்புக் காரணமாக உயிரிழந்திருப்பதாக மரியுபோல் நகர நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. இந்த நகரில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நீர், மின்சாரம் மற்றும் வெப்பமூட்டும் வசதி ஆகியன துண்டிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் கியேவில் உக்ரைன் படைகள் கடும் எதிர்ப்பை காட்டியபோதும் ரஷ்ய துருப்புகள் மெதுவாக முன்னேற்றம் கண்டு வருகிறது. எனினும் நாட்டின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் ரஷ்யா வேகமாக முன்னேறுகிறது.

தலைநகரை நோக்கி முன்னேறுவதில் புறநகர் பகுதியான இர்பின் தீர்க்கமான புள்ளியாக உள்ளது. இங்கு பொதுமக்கள் பனிக்காற்று மற்றும் பனிப்பொழிவுக்கு மத்தியில் வெளியேறி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ரஷ்ய படையின் முன்னேற்றத்தை தடுப்பதற்கு உக்ரைன் படைகள் இர்பின் நதிக்கு மேலால் இருக்கும் பாலத்தை தகர்த்த நிலையில் பலகை மற்றும் இரும்பினாலான தற்காலிக பாதை ஊடாக அந்த நதியை கடக்க நீண்ட வரிகையில் மக்கள் காத்துள்ளனர்.

“நான் இங்கிருந்து வெளியேற விரும்பவில்லை. ஆனால் எம்மைச் சூழ இருக்கும் வீடுகளில் எவரும் இல்லை. குடிநீர், எரிவாயு, மின்சாரம் எதுவும் இல்லை” என்று 43 வயதான லரிசா புரொகொபட்ஸ் என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரிட்டன் பாராளுமன்றத்தில் வீடியோ மூலம் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி, “நாம் காடுகள், பயிர் நிலங்கள், கரைகள், வீதிகளில் இருந்து போராடுவோம்” என சூளுரைத்தார். இதன்போது செலென்ஸ்கியுக்கு எம்.பிக்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

உக்ரைனுக்கு போர் விமானம்

## போலந்தின் திட்டத்தை அமெரிக்கா நிராகரிப்பு

ஜெர்மனியில் உள்ள அமெரிக்க விமானத் தளம் ஒன்றின் வழியாக உக்ரைனுக்கு தனது மிக்–29 போர் விமானங்களை அனுப்பும் போலந்தின் திட்டத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது. இந்தத் திட்டம் ஒட்டுமொத்த நேட்டோ கூட்டணியையும் தீவிர அவதானத்திற்கு உட்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளது.



ரஷ்யப் படையெடுப்புக்கு மத்தியில் மேலும் போர் விமானங்களை தரும்படி உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையை அடுத்தே போலந்து இந்தத் திட்டத்தை முன்வைத்தது.

ரஷ்யத் தயாரிப்பு மிக்–29 போர் விமானங்களை ஜெர்மனியின் ரஸ்டெயினில் உள்ள அமெரிக்க விமானத் தளம் ஒன்றுக்கு வழங்குவதாகவும் பின்னர் அங்கிருந்து உக்ரைனுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் போலந்து முன்மொழிந்தது.

ஆனால் அமெரிக்க–நேட்டோ தளம் ஒன்றில் இருந்து ரஷ்யாவுடன் போட்டியிடும் உக்ரைன் வான் பரப்புக்கு போர் விமானங்களை பறக்கச் செய்வது ஒட்டுமொத்த நேட்டோ கூட்டணியையும் அவதானத்திற்கு உட்படுத்துவதாக இருக்கும் என்று பெண்டகன் பேச்சார் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவில் வர்த்தகத்தை நிறுத்தியது மக்டொனால்ட்ஸ், கொகா கோலா



ரஷ்யாவில் வர்த்தகத்தை நிறுத்திக்கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் பட்டியலில் மக்டொனால்ட்ஸ், கொகா கோலா மற்றும் ஸ்டார்பக்ஸ் நிறுவனங்களும் இணைந்துள்ளன.

ரஷ்யாவில் இருந்து தனது 850 உணவகங்களையும் தற்காலிகமாக மூடுவதாக மக்டொனால்ட்ஸ் அறிவித்திருப்பதோடு ஸ்டார்பக்ஸும் அங்குள்ள தனது 100 கடைகளை மூடுவதாக கூறியுள்ளது.

உக்ரைனில் இடம்பெறும் தேவையற்ற மனிதத் துன்பங்களுக்கு பதில் நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று மக்டொனால்ட்ஸ் குறிப்பிட்டுள்ளது. எனினும் ரஷ்யாவில் இருக்கும் தமது சுமார் 62,000 ஊழியர்களுக்கும் தொடர்ந்து சம்பளம் வழங்குவதாக அது கூறியுள்ளது.


உக்ரைனில் இடம்பெறும் போரினால் ரஷ்யாவை புறக்கணிப்பது பற்றி பல நிறுவனங்களுக்கும் அழுத்தம் அதிகரித்துள்ளது.

ஷெல் நிறுவனம் ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதை நிறுத்தியுள்ளது.

ரஷ்யாவில் பெருமளவில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்களில் சுமார் 290, அந்நாட்டிலிருந்து விலகவுள்ளதாய் அறிவித்துள்ளதாக யாலே பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

## செப்டெம்பர் 11: 20ஆவது கடத்தல்காரர் விடுதலை

செப்டெம்பர் 11 தாக்குதலில் 20 ஆவது கடத்தல்காரர் என குற்றம் சாட்டப்பட்ட சவூதி அரேபியாவின் 46 வயது முஹமது அல் கஹ்தானி குவான்தனாமோ பே சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.



அவர் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உரியவரில்லை என்று மீளாய்வுக் குழு ஒன்று தீர்மானித்ததை அடுத்தே சவூதி அரேபியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின் கஹ்தானி அமெரிக்க விசாரணையாளர்களால் மிக மோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். எனினும் அவர் வழங்கு விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

செப்டெம்பர் 11இல் நான்கு அல்கொய்தா உறுப்பினர்களால் கடத்தப்பட்ட யுனைடட் ஏர்லைன் விமானம் 93 இல் கஹ்தானியும் இணையவிருந்ததாக அமெரிக்க நிர்வாகம் குற்றம்சாட்டுகிறது.

எனினும், முந்தைய மாதத்தில் அவர் அமெரிக்காவுக்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட அந்த விமானம் பென்சில்வேனியாவில் விழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன், அமெரிக்க நாடுகள் ரஷ்ய எண்ணெய்க்குத் தடை

உக்ரைன் மீதான படையெடுப்புக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் ரஷ்யாவின் எண்ணெய்க்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தடை விதித்திருப்பதோடு ரஷ்ய எரிவாயு மீதான நம்பிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

ரஷ்ய பொருளாதாரத்தின் நாடித் துடிப்பை இலக்கு வைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.



ரஷ்ய வருவாயின் பிரதான மூலமாக வலுசக்தி ஏற்றுமதிகள் இருந்தபோதும் இந்த நடவடிக்கை மேற்குலக நுகர்வோரிடமும் தாக்கம் செலுத்த வாய்ப்பு உள்ளது. சவூதி அரேபியா மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்து உலகின் மூன்றாவது மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடாக ரஷ்யா உள்ளது.

அமெரிக்காவின் எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தயாரிப்புகளில் சுமார் 8 வீதமானது ரஷ்யாவில் இருந்து வருவதோடு பிரிட்டன் எண்ணெய் இறக்குமதியில் சுமார் 6 வீதம் ரஷ்யாவில் இருந்து வருகிறது.

எனினும் ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவின் வலுசக்தியில் பெரிதும் நம்பியுள்ளது. எனவே அந்த நாடுகள் தடைகளை விதிப்பதை தவிர்த்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தடை அறிவிக்கப்படும் முன்னர் இது சர்வதேசப் பொருளாதாரத்தில் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஜெர்மனிக்கான பிரதான எரிவாயு மூடப்படக் கூடும் என்றும் ரஷ்யா எச்சரித்திருந்தது.

இந்தப் போரினால் ஏற்கனவே எரிபொருள் விலை சாதனை அளவுக்கு அதிகரித்திருப்பதோடு இந்த புதிய தடைகளால் அது மேலும் அதிகரிக்கக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும் ரஷ்ய எண்ணெய்க்கு மாற்றாக வெனிசுவேலா தனது எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

## கொவிட் நோயுற்றவர்கள் மூளை சுருங்கும் பாதிப்பு



கொவிட்–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்படும் சிலருக்கு மூளைச் சுருக்கம் ஏற்படலாம் என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு கூறுகிறது.

மூளையில் உணர்ச்சி, ஞாபகம், நுகரும் ஆற்றல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் பகுதிகளை நோய்த்தொற்று அதிகமாகப் பாதிக்கிறது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்படாத கொவிட்–19 நோயாளிகளிடையிலும் அத்தகைய பாதிப்பு ஏற்பட்டுள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

நோய்த்தொற்றால் மூளைக்கு ஏற்படும் பாதிப்பு நிரந்தரமானதா என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ள கூடுதல் ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும், நோய்த்தொற்றால் மூளையின் ஆற்றல் பாதிக்கப்படுகிறது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன என்று ஆய்வறிக்கையில் கூறப்பட்டது.

நோயால் மிதமாகப் பாதிக்கப்படுவோர் வழக்கம்போல் இயங்குவது, கவனம் செலுத்துவது போன்றவற்றில் சவால்களை எதிர்நோக்கியதாக ஆய்வு கண்டறிந்தது.

ஆய்வில் 51 வயதுக்கும் 81 வயதுக்கும் இடைப்பட்ட 785 பேர் கலந்துகொண்டனர்.

## நேட்டோ உறுப்புரிமை கேட்டு இனி கெஞ்சப்போவதில்லை

### உக்ரைன் ஜனாதிபதி உறுதி

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி நேட்டோ கூட்டணியில் சேர்வதைத் தாம் இனி வற்புறுத்திக் கேட்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார். ரஷ்யாவை அமைதிப்படுத்தும் வகையில் அவருடைய பேச்சு அமைந்திருந்தது.



நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர விரும்பியதே ரஷ்யப் படையெடுப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டது.

ஆக்கிரமிப்பைத் ஆரம்பிப்பதற்கு முன்னர், உக்ரைனில் உள்ள இரண்டு ரஷ்ய ஆதரவு வட்டாரங்களை, சுதந்திரம் பெற்ற பகுதிகளாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவித்தார். அதிலும் உக்ரைன் சமரசமாகப் போக விரும்புவதாக செலென்ஸ்கி கூறினார்.

நேட்டோ அமைப்பு உக்ரைனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அந்த அமைப்பு சர்ச்சைக்குரிய காரியங்களில் ஈடுபடவும் ரஷ்யாவுடன் மோதவும் அஞ்சுகிறது. என்று ஏ.பி.சி நியுஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

“எங்களை இணைத்துக்கொள்ள நேட்டோ தயாராக இல்லை என்பதை புரிந்துகொண்ட பின், நேட்டோ படையில் இணைய வேண்டும் என்ற என் மனநிலை மாறிவிட்டது” என அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோவில் சேர்வது பற்றிக் குறிப்பிட்டபோது, அங்கத்துவம் கேட்டு மன்றாடும் நாட்டின் ஜனாதிபதியாக இருக்க விரும்பவில்லை. என்று குறிப்பிட்டார்.

நேட்டோ படையில் சேராமல் இருப்பது, கிரைமியாவை ரஷ்யாவின் அங்கம் என அங்கீகரிப்பது, டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை சுதந்திரமானவை என அங்கீகரிப்பது ஆகிய ரஷ்யாவின் 3 வலியுறுத்தல்கள் குறித்த கேள்விக்கு பதிலளித்த செலென்ஸ்கி, தான் இது குறித்த பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

## உக்ரைனில் இருந்து 182 இந்தியர் வருகை



உக்ரைனில் நிர்க்கதியான 182 இந்திய நாட்டவர்களை ஏற்றிய சிறப்பு விமானம் ஒன்று ருமேனியாவில் இருந்து மும்பை நகரை அடைந்துள்ளது.

இந்தியர்களை மீட்டுவரும் கங்கா திட்டத்தின் கீழ் இந்த விமானம் ருமேனிய தலைநகர் புச்சரஸ்டில் இருந்து புறப்பட்டது. சத்ரபத்தி சிவாஜி சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்த இந்தியர்களை மத்திய இணை அமைச்சர் ராஜ் பாட்டீல் வரவேற்றார். உக்ரைனில் இருந்து வந்த மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

உக்ரைன் பிரச்சினை குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி பல உயர்மட்ட கூட்டங்களை நடத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்:

# எனது கோரிக்கையை அன்றே ஏற்றிருந்தால் பாரிய அழிவுகளை தடுத்திருக்கலாம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அதுதான் எமது பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்ப புள்ளி என நான் 30 வருடங்களுக்கு முன் வலியுறுத்தியிருந்தேன். எனது தீர்க்கதரிசனமிக்க கூற்றை அன்றே ஏற்றிருந்தால் இத்தனை அழிவுகளையும் துயரங்களையும் மக்கள் கண்டிருக்க வேண்டி ஏற்பட்டிருக்காது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்திற்கு அமைய நாடளாவியரீதியில் 1000 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றும் திட்டத்தின் அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலையை தேசிய பாடசாலையாக மாற்றும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இன்று உலக மகளிர் தினமாகும். இந்த பெருமை மிக்க நாளில் பெண்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் வகையில் இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கான துறைசார் அமைச்சர், இந்த தேசிய திட்டத்தை எங்கிருந்து ஆரம்பிப்போம் என கேட்டிருந்தார். அதற்கு நான் எமது யாழ் மாவட்டத்தின் இப்பாடசாலையை முன்மொழிந்திருந்தேன். அதனடிப்படையில் இன்று அந்த பாடசாலை மாணவர்களினதும் கல்விச் சமூகத்தினதும் கனவு நனவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எமது உரிமைப் போராட்ட காலகட்டங்களிலும் சரி அதன் பின்னரான ஜனநாயக அரசியலிலும் சரி நான் பெண்களுக்கான உரிமையை ஆண்களுக்கு சரிநிகராகவும் சில சமயங்களில் அதற்கு சற்று அதிகமாகவும் கொடுத்து வந்திருக்கின்றேன்.

அதேபோன்று ஆயுதப் போராட்ட களமுனையில் முதல் வீரகாவியமான பெண்ணாகவும் எனது சகோதரியான மதிவதனி என்றும் இயற் பெயர் கொண்டவருமான சோபா வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

அதுமட்டுமல்லாது எனக்கும் கட்சிக்கும் நெருக்கமான மனித உரிமை சட்டத்தரணியான மகேஸ்வரி வேலாயுதம் உள்ளிட்ட ஏராளமானவர்களையும் வன்முறையாளர்களினால் இழந்திருக்கின்றேன்.

ஆனபடியால் எனக்கு இப்போராட்டத்தின் வலிகள் நன்கு தெரியும். அதனால்தான் இந்த போராட்டத்தின் அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் நானும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கூற வேண்டும்.

இதேவேளை 72 களில் தரப்படுத்தலுக்கு எதிராக நாம் போராடியிருந்தோம். அதன்பின்னர் பல வருடங்கள் கழித்து நான் அமைச்சராக இருந்தபோது ஸ்ரான்லி வீதியில் 400 முதல் 500 பேர் என்னை வந்து சந்தித்து தரப்படுத்தலினூடாக தமக்கான பல்கலை நுழைவை ஏற்படுத்தி தருமாறு கோரியிருந்தனர்.

நான் அதை ஏற்று அன்றைய ஜனாதிபதியுடன் பேசி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன்.



## பரத ஆடல் அரங்கேற்றம்

நீர்வையூர் பொன்சக்தி கலாகேந்திரன் இயக்குனர் சத்தயப்பிரியா கஜேந்திரனின் மாணவியும் யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியுமான அபிநஜா கஜேந்திரனின் பரத ஆடல் அரங்கேற்றம் நாளை மறுதினம் (12.03.2022) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி க.சுதாகர் கலந்துகொள்ளவுள்ளார்.



## பஸ் சாரதியின் மூக்கை வெட்டிய நபர்

**யாழ்.விசேட நிருபர்**

யாழில் தனியார் பஸ் ஒன்றை இடைமறித்த நபரொருவர் சாரதியின் மூக்கை கத்தியால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளார். பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்சினை நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் வழிமறித்து ஏறிய நபரொருவர், சாரதியின் மூக்கை கத்தியால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளார். காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தந்தை மதுவுக்கு அடிமை; மாணவி பொலிஸில் தஞ்சம்

**யாழ். விசேட நிருபர்**

வீட்டில் தன்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை என கூறி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் மாணவியொருவர் தஞ்சம் புகுந்துள்ளனர். இதனையடுத்து மாணவியை பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தரம் 7 கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவியொருவரே இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மதுபோதையில் தந்தை, தாயுடன் சண்டை பிடிப்பதாகவும் இருவராலும் தான் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை எனவும் மாணவி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

## கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் பலி

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு நெட்டாங்கண்டல் பிரதேசத்துக்குட்பட்ட சிராட்டிகுளம் பகுதியில் நேற்று அதிகாலை காட்டுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கட்டுத்துவக்கு துப்பாக்கியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

நெட்டாங்கண்டல் உழவனேரி பகுதியினை சேர்ந்த 38 வயதுடைய தர்மலிங்கம் இளங்கோ என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த இவர் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார மருத்துவமனை கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளது.

இவரது உடலம் மல்லாவி ஆதாரமருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## உள்ளூர் துப்பாக்கி மீட்பு

கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் உள்ளூர் துப்பாக்கியொன்று மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்றைய தினம் பிரதேசத்திலுள்ள இராணுவத்தினரால் துப்பாக்கி மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பல்கலை போலி அடையாள அட்டையுடன் யுவதி கைது

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையுடன் தங்கியிருந்த யுவதியொருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையை காண்பித்து திருநெல்வேலி பகுதியில் வாடகை அறையில் தங்கியிருந்துள்ளார். அவரது நடவடிக்கைகளில் வீட்டு உரிமையாளர் சந்தேகம் கொண்டமையால் இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இத்தகவலின் பிரகாரம் வீட்டுக்கு சென்ற பொலிஸார் வாடகை அறையில் தங்கியிருந்த யுவதியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதன்போது யுவதி மருத்துவ பீட மாணவி அல்ல என்பதனையும் அது போலியான அடையாள அட்டை என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

அதனையடுத்து யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுயிவ செனரத் யாப்பா தலைமையில் 512, 522 பிரிகேடியர்கள் இணைந்து யாழ். விழிப் புலனற்றோர் சங்கத்தின் மகளிர் அங்கத்துவ பெண்களை கௌரவிக்கும் நிகழ்வுகளை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறப்பு விருந்தினராக பிறேம் எலற்றிக் கலந்துகொண்டார். மேலும் ஹேமாஸ் எஞ்சினரிங் தனியார் நிறுவனங்கள் இணை அனுசரணை வழங்கியிருந்தன. இதன்போது மதிய உணவுடன் மகளிருக்கான விசேட அத்தியாவசிய பொருட்களும் ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்பட்டது.

## வடக்கில் பொலிஸார் மற்றும் அரச ஆதரவாளர்களின் அடாவடித்தனம்

### தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்கிறார் ஸ்ரீதரன் எம்.பி.

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



வடக்கில் பொலிஸார் மற்றும் அரச ஆதரவாளர்கள் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யாழ். வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் அருள்குமாரன் ஜோன்ஜிப்ரிகோ, இளவாலை பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் நீதி கிடைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை வடக்கில் பொலிஸாரினதும் அரச ஆதரவு அரசியல்வாதிகளினதும் அராஜகங்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமெனவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே ஸ்ரீதரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ். வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் அருள்குமாரன் ஜோன்ஜிப்ரிகோ இம்மாதம் 03 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது வீட்டுக்கும் இளவாலை பொலிஸ் நிலையத்துக்கும் சுமார் 500 மீற்றர் தூரமே காணப்படுகின்றதுடன் பொலிஸார் அந்த விசாரணைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தாமல் உள்ளதாக ஸ்ரீதரன் எம் பி மேலும் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் நாவற்குழி கிளை கழகம் யோகபுரம் கிராமத்தில் வாழும் மிகவும் வறுமைக் போட்டின் கீழுள்ள குடும்பத்தை சேர்ந்த மாணவிக்கு துவிச்சக்கர வண்டியொன்றை அன்பளிப்பு செய்துள்ளனர்.

## ஆதிமயிலிட்டி ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதராயர் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விழா



யாழ். ஆதிமயிலிட்டி ஸ்ரீ பூதநாயகி சமேத காசி பூதராயர் தேவஸ்தானத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை (11ஆம் திகதி) வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதியன்று நடைபெற்ற ஆலயத்தின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தொடர்ந்து 48 நாட்கள் இடம்பெற்று வந்த மண்டலாபிஷேகம் விசேட சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறுகிறது. நாளை (11ஆம் திகதி) நடைபெறும் மண்டலாபிஷேக பூர்த்திப் பெருவிழாவில் இந்தியா பேரூர் ஆதீன முதல்வர் திருப்பெருந்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் கலந்து கொண்டு அடியார்களுக்கு ஆசி வழங்குவார்.

## பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த ஆந்தை வனஜீவராசிகளிடம் ஒப்படைப்பு





**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பறக்க முடியாத நிலையில் நேற்றிரவு ஆந்தை குஞ்சு இருந்துள்ளது. இதனை மீட்ட பொலிஸார் அதனை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட ஆந்தை குஞ்சு மருத்துவ சிகிச்சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை வைத்திய நிலைய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# பஷிலின் தேசிய அரசு கோட்பாடு சிறுபான்மையினருக்கு நன்மையே

## பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் வரவேற்பு

**கல்முனை விசேட, மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்**

அரசு மீது சுமத்தப்பட்டிருக்கின்ற இனவாத சாயத்தை இல்லாமல் செய்வதற்காக, சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்திருக்கும் கோட்பாடானது, சிறுபான்மையினருக்கு நம்பிக்கையான எதிர்காலத்தை தோற்றுவிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற தேசிய பாடசாலை பிரகடன நிகழ்வு மற்றும் சர்வதேச மகளிர் தின வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.



கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ.அமீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய பல விடயங்கள் கடந்த ஒரு சில வாரங்களாக இடம்பெற்று வருகின்றன. ஏனென்றால் இந்த நாட்டின் அரச கட்டமைப்பு என்பது இன்று ரஷ்ய, உக்ரைன் போர் காரணமாக விரும்பியோ விரும்பாமலோ புதிய சிந்தனைக்குள் காலடி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதன் விளைவு எங்களுடைய சிறுபான்மை சமூகங்கள் சம்மந்தப்பட்ட விடயங்கள் ஆட்சியாளர்களின் பார்வைக்குள் கிரமமாக வந்து கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் தான் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதிய கோட்பாடு ஒன்றை முன்வைத்திருக்கிறார்.

சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

இதன் மூலம் அரசு மீது சுமத்தப்பட்டிருக்கின்ற இனவாத சாயத்தை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்திட்டத்தை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்வைத்திருக்கிறார்.

இந்த விடயம் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையிலேயே கொரோனாவால் மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவரவர் சொந்த பிரதேசங்களில் உள்ள மையவாடிகளில் அடக்கம் செய்யலாம் என்கிற அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது.

உண்மையில் எமது நாடு இப்போது எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட வேண்டுமானால் அனைத்து சமூகத்தினரும் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாடாக மாற்றப்பட வேண்டும் என்கிற யதார்த்தம் உணரப்பட்டிருக்கிறது என்றார்.

## ஆறுகளை சுத்தம் செய்யும் செயற்பாடு



**தோப்பூர் குறூப் நிருபர்**

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக ஆறுகளை பாதுகாப்போம் "சுரக்கும் கங்கா" எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மாவிலாறு நீர்ப்பாசன பிரிவின்கீழ் உள்ள, கிளிவெட்டி ஆற்றில் உள்ள நீர்வாழைத் தாவரங்களை சேதனப்பசளைத் தயாரிப்பதற்காக பிரித்தெடுப்பதற்காக நீர் வாழைத் தாவரங்களை பிரித்தெடுக்கும் வேலைத் திட்டம் திங்கட்கிழமை (07) கிளிவெட்டி ஆற்றில் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், கிளிவெட்டி ஆற்றிலிருந்து மாவிலாறு ஆறு வரையிலான சுமார் 06 கிலோ மீற்றர் தூரமுள்ள நீர் வாழைத் தாவரங்கள் அகற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நீர் வாழைத் தாவரங்களை பிரித்தெடுக்கும் பணியில் சேருநுவர சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்திருந்தனர். இத்தேசிய வேலைத் திட்டத்தின் திருகோணமலைக்கான வேலைத்திட்டம் கிளிவெட்டி ஆற்றிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் ம.சிவக்குமார், சேருநுவர உதவி பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# உரமானியம் வழங்க கோரி அம்பாறை மாவட்ட விவசாயிகள் போராட்டம்





**வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் நிருபர்**

இடைநிறுத்தப்பட்டுள்ள உரமானியத்தை எதிர்வரும் சிறுபோகத்திற்கு முன் வழங்குமாறும், பெரும் போகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பயிர் சேதத்திற்கு நட்டஈடாக ஏக்கருக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்குமாறு வேண்டியும் அகில இலங்கை விவசாய சம்மேளனம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை அம்பாறை கச்சேரிக்கு முன்னால் செவ்வாய்க்கிழமை (08) ஏற்பாடு செய்திருந்தனர்.

அகில இலங்கை விவசாய சம்மேளனமும், அரச விவசாய சங்க ஒன்றியமும் ஏற்பாடு செய்த இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன, அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் அம்பாறை மாவட்ட தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ, அம்பாறை மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செய்கையில், போதிய இரசாயன உரம் விவசாயிகளுக்கு கிடைக்காததால் நெற்செய்கை முற்று முழுதாக பாதிக்கப்பட்டதுடன், ஏனைய சிறு தானிய மற்றும் உப உணவுப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் குறைந்த விளைச்சலையே விவசாயிகள் பெற்றுக் கொண்டதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குமாறும் சிறுபோக பயிர் செய்கை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பதால் விவசாயிகளுக்கு அவசியமான உரத்தையும், கிருமிநாசினிகளையும் உரிய காலத்திற்கு முன் வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் தின நடைபவனி





**கல்லடி குறூப் நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் ஏற்பாட்டில், மாபெரும் விழிப்புணர்வு நடைபவனியென்று செவ்வாய்க்கிழமை (08) மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் விழிப்புணர்வு நடை பவனியில் சுமார் 1000 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகிய இவ் விழிப்புணர்வு ஊர்வலமானது, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயத்தை சென்றடைந்ததும், அங்கு பிரதான அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், உயிரிழந்த கட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் கட்சியின் முன்னாள் மகளிர் அணி செயலாளருமான அமரர் திருமதி.செல்வி மனோகர் ஆகிய இருவரினதும் திருவுருவச்சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வழி நடாத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணை தலைவரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கொண்டிருந்தனர்.

## மான் இறைச்சியுடன் ஐவர் கைது

**தோப்பூர் குறூப் நிருபர்**

சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேருவில காட்டுப் பகுதியில் மான் இறைச்சி வைத்திருந்ததாக, ஐந்து சந்தேக நபர்களை சேருநுவர பொலிஸார் கைது செய்து திங்கட்கிழமை (7) மூதூர் நீதிவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து, குறித்த சந்தேக நபர்கள் குற்றவாளிகளென நீதவான் கருதி முதலாம் சந்தேக நபருக்கு முப்பதாயிரம் ரூபாயும் ஏனைய நான்கு சந்தேக நபர்களுக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாம் சந்தேக நபர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கு வைத்திருந்த நிலையில் கைது செய்ததாக, பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

## திருகோணமலையில் முன்பள்ளி ஆசிரியர்களின் மகளிர் தின நிகழ்வு

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை (08) திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் மகளிர் தின நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் திருகோணமலை வலயத்தில் 25 வருடத்திற்கு மேல் ஆசிரியராக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் போது கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.



இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை செயலாளர் திருமதி என்.யாழினி கலந்து சிறப்பித்ததுடன், திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலைய பெண்கள் பிரிவு உத்தியோகத்தர் எல்டன், சென்மேரிஸ் கல்லூரி அதிபர் அருட் சகோதரி நிரோசா, மூதூர் தளவைத்தியசாலையின் நிருவாக உத்தியோகத்தர் கௌரிதேவி ராஜேந்திரன், திருகோணமலை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஜே.சுகந்தினி, பாலர் பாடசாலை கல்வி பணியக வெளிக்கள உத்தியோகத்தர் வீ.சர்மிலா, முன் பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் டீ.அமுதியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.




அட்டாளைச்சேனை அந்நூர் மாகா வித்தியாலயத்தில் மாவட்ட சாரணர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சாரண நிகழ்வில், சங்கத்தின் தவிசாளரும்,முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.எம்.ஹாசிம் உரையாற்றுவதையும், மாவட்ட ஆணையாளர் எஸ்.ரவீந்திரன் உள்ளிட்ட சாரணர்கள் அருகில் இருப்பதையும் காணலாம்.

படம்: பாலமுனை தினகரன் நிருபர்

## விளக்கமறியலில் வைக்கப்பட் ஊடகவியலாளருக்கு பிணை

**பாசிக்குடா நிருபர்**

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 16 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வாழைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் மு.கோகிலதாசன் வயது (38) திங்கட்கிழமை (7) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நீதிபதி எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் , இவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.



அவரது முகப் புத்தகத்தில் அரசினால் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் (கார்த்திகை 27) அடங்கிய புகைப்படங்களை பதிவிட்டார் என்பதன் அடிப்படையில், இவர் 28.11.2020 ஆம் திகதி வாழைச்சேனை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இவர் கடந்த ஒரு வருடமும் 4 மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

# வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2021 பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையுடைய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் அடிப்படையில், அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு தேங்காய் துருவும் இயந்திரங்கள் மற்றும் மாவிடிக்கும் இயந்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (04) மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமட் ஸகி தலைமையில் மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது மாநகர சபை உறுப்பினர்களான அஸ்மி அப்துல் கபூர், ஏ.சீ.எம்.நுஹ்மான் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பயனாளிகள் கலந்து கொண்டனர்.




# வீதி விளக்குகளை அணைப்பதற்கு நடவடிக்கை



மாத்தளை சுழற்சி நிருபர்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை கருத்திற்கொண்டு உக்குவளை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளை அணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேசசபை தலைவர் நிசார் ராஜா தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள மின்சக்தி நெருக்கடிக்கு தீர்வு காணும் பொருட்டு அரசாங்கத்தினால் உள்ளூராட்சி சபைகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க இத்தீர்மானம் பிரதேச சபையினால் கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கமைய இப்பிரதேசத்திலுள்ள வீதி விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் சேதனப் பசளை மூலம் தென்னை உற்பத்தி

சப்ரகமுவ மாகாண விவசாய திணைக்களம் 33 ஏக்கர் நிலத்தில் சேதனப் பசளை மூலம் தென்னை உற்பத்தியினை ஆரம்பித்துள்ளது.

ரம்புக்கன மாருக்வதுர பிரதேசத்தில் ஆரம்பித்துள்ள சேதனப் பசளை தென்னை உற்பத்தியினை பரிசீலனை செய்யும் பொருட்டு அண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ அப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண விவசாய திணைக்களத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டு முதல் 33 ஏக்கர் நிலத்தில் சேதனம் பசளையினை பயன்படுத்தி தென்னை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கேகாலை தோட்ட கம்பனிக்கு சொந்தமான இந்த தோட்டத்தினை சப்ரகமுவ மாகாண சபை பொறுப்பேற்றுள்ளது. இந்தத் தோட்டத்தில் 1500 தென்னை மரங்கள் உள்ளதுடன் அதற்கு மேலதிகமாக உள்ளூர் கிழங்கு வகைகள், வாழை, மா, ரம்புட்டான், துரியன்ஆகிய உற்பத்திகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாகாண விவசாய பணிப்பாளர் தனஞ்ஜனி பண்டார தெரிவித்தார்.

இந்தத் தோட்டத்திற்கான நீரினைப் பெற்றுக் கொள்ள அங்குள்ள நீர் நிலைகளின் மூலம் சிறிய குளமொன்றை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சேதனப் பசளை உற்பத்தி வேலைத் திட்டத்திற்காக சப்ரகமுவ மாகாண சபை முழுப் பங்களிப்பை வழங்கி வருவதாக ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

# வரட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தில் பாரிய வீழ்ச்சி

ஹட்டன் விசேட நிருபர்

மத்திய மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையினைத் தொடர்ந்து நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் என்றுமில்லாவாறு குறைந்துள்ளது. இதனால் நீருக்குள் மூழ்கிக்கிடந்த கட்டடங்கள் மேலோங்கி காணப்படுகின்றன.

இதுவரையில் மலையகத்தில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 63.5 சதவீதம் குறைவடைந்துள்ளது. தற்போது 36.5 சதவீத நீரே சேமிப்பில் உள்ளதாக மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதில் மவுசாகலை நீர்தேக்கத்தில் 62.5. சதவீதம் குறைவடைந்துள்ளது. தற்போது 37.5 சதவீதமே எஞ்சியுள்ளது.

காசல்ரி நீர்தேக்கத்தில் 79.7 சதவீதம் குறைவடைந்துள்ளது. இதில் தற்போது 20.3. சதவீத நீரே மிஞ்சியுள்ளது. கொத்மலை 71.9 நீர்தேக்கத்தில் இதுவரை குறைவடைந்துள்ளதாகவும் 28.1 சதவீத நீர் சேமிப்பில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் தாழிறங்க தொடங்கியதன் காரணமாக நீர் மூழ்கியிருந்த ஆலயங்கள், பள்ளிவாசல்கள், பௌத்த விகாரைகள் உள்ளிட்ட கட்டடங்கள் முழுமையாக தென்பட ஆரம்பித்துள்ளது.

குறித்த கட்டடங்களை பார்வையிடுவதற்காக பலர் பல பிரதேசங்களிலிருந்து வருகை தருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

நீரேந்தும் பிரதேசங்களில் மேலும் வரட்சியான காலநிலை நிலவும் பட்சத்தில் பாரிய நீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் இதனால் நீர் மின் உற்பத்தியும் பாரிய அளவில் பாதிப்படையலாம் என மின்சாரதுறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வரட்சியான காலப்பகுதியில் பொது மக்கள் நீரினை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் மின்வெட்டு மற்றும் குடிநீர் பற்றாக்குறை ஆகியன ஏற்படுவதனை தவிர்த்து கொள்ளலாம் என பலரும் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# நவீன முறையிலான டிஜிட்டல் தராசு வேண்டாம் தோட்டத் தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்



ஹப்புத்தளை பண்டாரயெலிய தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எதிராக நேற்று பணிப்பகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பறிக்கப்படும் தேயிலைத் தளிர்களை நிறுப்பதற்கு, தோட்ட நிர்வாகம் நவீன முறையிலான டிஜிட்டல் தராசுகளை பயன்படுத்துவதை கண்டித்தே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நவீன முறையிலான டிஜிட்டல் தராசு எமக்கு வேண்டாம், இத்தராசினால் நான்கு கிலோ எடையை குறைத்து காட்சிப்படுத்தப்படுகின்றது என மக்கள் தெரிவித்தனர். தொழிலாளர்களின் அடையாள அட்டைப் பதிவும் இத்தராசில் பதியப்படுகின்றது. ஆகையினால் இத் தராசுப் பாவனையை உடன் நிறுத்தும்படி தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தராசு நிர்வாகத்திற்கு சாதகமாகவும்,

தொழிலாளர்களின் உழைப்பினை சுரண்டுவதற்கு பயன்படுத்தப்படுவதாகவும் தொழிலாளிகள் புகார் தெரிவித்தனர்.

# பாடசாலை மாணவி கொலை

## சந்தேக நபர் கைது



ஹற்றன் சுழற்சி நிருபர்

பதுளை – ஹாலிஎல, உடுவர மேற்பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவர் கோடரியால் தாக்கப்பட்டு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று (9) அதிகாலை பொலிஸில் ஆஜராகியதையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார் என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய 18 வயதான மாணவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் பழைய பகையொன்றே இச்சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய 32 வயதான சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில் சந்தேகநபர் நேற்று அதிகாலை ஹாலிஎல பொலிஸில் ஆஜரானார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹாலி எல தமிழ் மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கல்வி கற்கும் தர்மராஜா நிதியா (வயது 18) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒருவருடமாக குறித்த மாணவியை சந்தேகநபர் ஒருதலையாக காதலித்து வந்ததாகவும் அதனை அம்மாணவி நிராகரித்து வந்துள்ளார். அத்துடன் மாணவியின் பெற்றோரும் இக்காதலை எதிர்த்தமையால் மாணவியின் பெற்றோர் சந்தேகநபரால் இதற்கு முன்னர் கத்திகுத்துக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# கூறகல விகாரை ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு 200 பேர் இரத்ததானம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை கூறகல பௌத்த பூமியில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு 200 பேர் இரத்ததானம் செய்துள்ளனர். இவ்விகாரையின் பிரதம குரு வதுர கும்புகே நெல்லி கல தேரரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதேவேளை மாபெரும் இரத்ததான மற்றும் இலவச வைத்திய முகாம் ஒன்றை 11ஆம் திகதி பெல்மதுளை ரஜமஹா விகாரையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த இரத்ததான நிகழ்வுடன் பொது மக்களுக்குக் கண், பல், காது வைத்திய முகாம் ஒன்றை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கொவிட் இலவச பூஸ்டர் வழங்கும் நிகழ்வும் இத்தினம் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இலவச மூக்குக் கண்ணாடி உட்பட மேலும் சில வை த்திய உதவிகள் இங்கு வழங்கப்பட வுள்ளன. பெல்மதுளை நகர வர்த்தக சங்கம், பெல்மதுளை காவத்தை லெல்லோபிடிய லயன்ஸ் கழகங்கள் இதனை ஏற்பாடு செய்துள்ளதுடன் தேசிய இரத்த வங்கி, சப்ரகமுவ மாகாண சுகா தாரத் திணைக்களம், பெல்மதுளை சுகாதார நிலையம் ஆகியன இதற்கான வளவாளர்களை வழங்கவுள்ளன.

# 832 மில்லியன் மக்களுக்கு புலப்படாத நீரிழிவு நோய்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது என இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் மிதுன் சேனாரத்ன தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் விளக்கமளிக்கையில உலகில் பிறப்பு வீதத்தில் ஆறில் ஒருவருக்கு நீரிழிவு ஏற்படும் அவதானம் நிலவுகிறது.

உலக சனத்தொகையில் 832 மில்லியன் மக்களுக்கு புலப்படாத நீரிழிவு நோய் காணப்படுகிறது என கணி க்கப்பட்டுள்ளது. வருமானம் குறைந்த மற்றும் மத்திய வருமானம் பெறும் நாட்டு மக்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும் தாக்கம் அதிகமாக உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. உலக நகர சனத்தொகையில் மூன்றில் இரண்டு தொழிலாளர்களில் நாளில் மூன்று பேருக்கும் நீரிழிவு காணப்படுகிறது.

மேலும் உலக சனத்தொகையில் நீரிழிவு ஏற்பட்டவர்களில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை130 மில்லியன்களாகும்.

அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக தாகம், அடிக்கடி பசி ஏற்படுதல், நிறை குறைவு, பார்வைக் குறைவு, புண் ஆறுதல் தாமதமாதல் போன்ற அடையாளங்கள் நீரிழிவு நோயின் பிரதான அடையாளங்களாகும்.

தினமும் முடியுமான அளவு உடற்பயிற்சியில் ஈடுபடுவது நீரிழிவு ஏற்படாமல் தடு ப்பதற்கு மிகச் சிறந்த வைத்தியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கவிதை நூல் வெளியீட்டு விழா

லுணுகல நிருபர்

பதுளை, நமுனுகுல பிங்கராவ தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர் சாமிநாதன் யுகநாதனின் " மனதிற்குள் ஒரு மனு " கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமையன்று பள்ளகெட்டுவ கலபிட்டகந்த தமிழ் இடைநிலை பாடசாலையில் முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. ஊவா தமிழ் இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டு குழுவினரால் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்ட உக்குவளை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட அனைத்து மகளிர் அமைப்புகளையும் ஒன்றிணைத்து உக்குவளை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின விழா உக்குவளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற போது மேற்படி பிராந்தியத்தில் சாதனை படைத்த 15 வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டதோடு இப்பிராந்தியத்தில் இருக்கும் குறைந்த வருமானம் பெரும் 25 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண திசாநாயக்க சாதனை படைத்த வீராங்கனைகளை கௌரவித்தார். இவர் வறிய குடும்பத்தினருக்கு உலர் உணவு பொருட்களும் வழங்கி வைத்தார்.

(படம்: உக்குவளை விஷேட நிருபர்)

# மோட்டார் சைக்கிள்கள் திருடியவர் கைது

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி மற்றும் குருணாகலைப் பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களைத் திருடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பொலிஸாரினால் 7 மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் முன்னாள் விமானப்படை வீரர் ஒருவர் எனத் தெரியவருகிறது. மாவத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் 37 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையாவார். அத்துடன் சந்தேக நபரை பொலிஸார் பரிசோதனை செய்த போது கைக்குண்டு ஒன்றும் ஹெரோயின் போதைப் பொருள் ஒரு பக்கட்டும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்படி மோட்டார் சைக்கிள்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட போது கைப்பற்றப்பட்டுள்ளன.



நுவரெலியா சர்வதேச ஆங்கில பாடசாலையில் மாணவ தலைவர்கள், தலைவிகள் தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று (௯ ) புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# பாடசாலைகளுக்கு முகக்கவசங்கள் வழங்குதல்

தலவாக்கலை குறூப் நிருபர்



தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரின் ஆலோசனைக்கமைய நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் அவர்களின் வேலைத் திட்டத்தின் ஊடாக நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து பிரதேசங்களிமுள்ள பாடசாலைகளுக்கும் நீண்ட பாவனை கொண்ட முகக் கவசங்கள் தற்போது நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு அமைய வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் (08) செவ்வாய்க்கிழமை நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட நானுஓயா நாவலர் கல்லூரி, நானுஓயா நாவலர் ஆரம்ப கல்லூரி, நானுஓயா கார்லிபேக் தமிழ் வித்தியாலயம், நானுஓயா ஜேம்ஸ் பீரிஸ் வித்தியாலயம் , நானுஓயா பொலிஸ் நிலையம், பொரலந்தை பீட்று தமிழ் வித்தியாலயம், சமர்ஹில் தமிழ் வித்தியாலயம், சமர்கில் தோட்டம், கோட்லொஜ் தமிழ் வித்தியாலயம் , கந்தப்பளை மெதடிஸ்த கல்லூரி, கந்தப்பளை ஐகிரின் ஆரம்ப பாடசாலை போன்ற இடங்களுக்கு நுவரெலியா பிரதேச சபைத் தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

# நகர்வலம்





ஜனாதிபதியின் சேதனப் பசளை கொள்கையினை நடைமுறைப்படுத்துகின்ற திட்டத்தின் கீழ் திவுலப்பிட்டிய, வல்பிட்ட கொம்போஸ்ட் உற்பத்தி நிலையம் மற்றும் திவுலப்பிட்டிய தாவான கொம்போஸ்ட் உற்பத்தி நிலைய சேதனப் பசளை விற்பனை நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழா (07) சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றபோது எடுத்த படம். சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட மரக்கறிச் செய்கையை அமைச்சர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

பென்டோரா பத்திர விவகாரம்

## ரஞ்சன் ராமநாயக்க கால அவகாசம் கோரியதே விசாரணை அறிக்கை தாமதத்துக்கு காரணம்

### ஆளும் தரப்பு பிரதம கொரடா ஜோன்ஸ்டன்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சாட்சியம் வழங்க கால அவகாசம் கோரியதாலே பென்டோரா பத்திர விவகாரம் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பது தாமதமாகியுள்ளதாக ஆளும் தரப்பு பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார். அறிக்கை வெளியிடுவதை அரசு வேண்டுமென்று தாமதிக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

பென்டோரா பத்திர அம்பலப்படுத்தல்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக அநுர குமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி பதிலளித்ததோடு அவரின் இடையீட்டு கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.



பென்டோரா பத்திர அம்பலப்படுத்தல்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக அநுர குமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி,

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்னெடுத்துவரும் விசாரணை தொடர்பில் அந்த ஆணைக்குழு அறிக்கை வழங்கியுள்ளது. திருக்குமார் நடேசன் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. பென்டோரா பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் பிரதமரின் ஆலோசகர் இராமலிங்கம் பாஸ்கரலிங்கம் தொடர்பாகவும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊடகங்களில் வெளியான தகவல்களின் பிரகாரம் பல்வேறு நபர்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை செய்துள்ளனர். அவற்றில் திருக்குமார் நடேசன் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ தொடர்பில் விசாரணை முன்னெடுக்குமாறு கோரப்பட்டுள்ளன.

ஊடகங்களில் வெளியான தகவல்களின் பிரகாரமும் பென்டோரா பத்திரத்திலுள்ள விடயங்களுக்கு அடிப்படையிலும் எழுத்து மூலமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.எம்.பிக்கள் சிலரும் எழுத்து மூலம் முறையிட்டுள்ளனர்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிசாரணைகள் நிறைவடையவில்லை. விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறதென ஆணைக்குழு அறிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பென்டோரா பத்திர விவகாரம் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் ஒரு மாதத்தில் அறிக்கை கோரியிருந்தார்.ஆனால் 04 மாதமாகியும் அறிக்கை வழங்காதது தொடர்பில் அநுர குமார எம்.பி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ,

இந்த விடயம் தொடர்பில் நானும் ஆராய்ந்தேன். ரஞ்சன் ராமநாயக்க சாட்சி முன்வைக்க அனுமதி கோரியிருந்தார். ஆனால் அதன் பின்னர் கால அவகாசம் கோரப்பட்டது. அவரின் சட்டத்தரணிக்கு கொரோனா தொற்றியதால் வாக்குமூலம் வழங்குவது தாமதமானது. அவர் ஓரிரு நாட்களுக்கு முன்னர் சத்தியக் கடதாசி மூலம் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்றார்.

## சீனன்கோட்டை அல் ஸலாஹ் மத்ரஸாவில் இரு பெரும் விழாக்கள்

பேருவளை, சீனன்கோட்டை அல்ஸலாஹ் அரபுக்கல்லூரியின் 20 வருடப் பூர்த்திவிழாவும், இரு ஹாபிழ்கள் முழுக் குர்ஆனையும் மனனமாக ஒருநாளில் பாராயணம் செய்யும் நிகழ்வும் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4.00 மணியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு மஃரிப் தொழுகையின் பின் தமாம் வைபவமும் கொரோனாவில் மரணித்தவர்களுக்காக வேண்டி விசேட துஆப் பிரார்த்தனையும் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி நிர்வாக சபை உப தலைவர் அல்ஹாஜ் ரிப்கான் சித்தீக் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் தஸ்கர ஹக்கானியா அறபுக்கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் முபீர் ஹனீபா (அல் முர்ஸி) பிரதம பேச்சாளராக கலந்து சிறப்பிப்பார். இந்நிகழ்வில் உலமாக்கள், கல்லூரி நிருவாகிகள், முக்கியஸ்தர்கள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். இர்ஷாத் (அல்தாபுர் ரப்பானி) தினகரனுக்கு தெரிவித்தார்.




வத்தளை றொட்டரி கழகம், (வத்தளை பிரதேச) பாடசாலை மாணவ மாணவிகளுக்கு ரூபா 8000 பெறுமதியிலான பணப்பரிசு 10 பிள்ளைகளுக்கு பரிசாக வழங்கி வைக்கப்பட்டது. கழகத்தின் தலைவர் லூவி சீமன், முன்னாள் தலைவர் ராஜலிங்கம், செயல்திட்ட தலைவர் சரவணன் மற்றும் அருள் மாணிக்கவாசகர் பாடசாலையின் நிர்வாக அதிகாரி சண்முகப்பிரபா ஆகியோர் பரிசில்களை வழங்கினர். (படம்: எம். நசார்)

## பெண்களின் உயர் அந்தஸ்திற்கு கல்வி ஆர்வமே பிரதான காரணம்

மாலிம்மடை பிரதேச செயலாளர் தெரிவிப்பு

**(மாத்தறை தினகரன், வெலிகம தினகரன் நிருபர்கள்)**

பெண்கள் இன்று சமூகத்தில் உயரிய அந்தஸ்தில் இருப்பதற்கு அவர்கள் கல்வித்துறையில் காட்டும் ஆர்வமே பிரதான காரணமென மா./மாலிம்மடை பிரதேச செயலாளர் ஹரீந்திர ஜெயலால் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட பிரதேச செயலகங்களில் இருக்கின்ற செயலாளர்களில் பெரும்பான்மையானோர் பெண்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் (08) நடைபெற்ற மகளிர் தின வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மாத்தறை மாவட்ட செயலாளர் வை. விக்கிரமசிறி தலைமையில் மகளிர் தின வைபவம் மேற்படி செயலகத்தில் நடைபெற்றது.

மேலைத்தேய நாடுகளைவிடவும்

## ஆசியாவிலே அதிக பெண்கள் ஆட்சிபீடத்தை அலங்கரித்துள்ளனர்

### பெண்கள் தின நிகழ்வில் பாகிஸ்தான் தூதுவர்

ஒவ்வொரு தொழிலையும் சீருடைகள் பாதுகாப்பதைப்போல, சமூகத்தின் பாதுகாப்பு பெண்களின் பங்களிப்பில் தங்கியுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்தார். அறுகம்பையில் (08) நடைபெற்ற பெண்கள் தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

பல்துறை ஆளுமையுள்ள பெண்கள் பாராட்டப்பட்ட இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது; ஜனநாயகத்தை மதிப்பதாகக் கூறும், மேலைத்தேய நாடுகளிலும் பார்க்க ஆசிய நாடுகளில் அதிகளவு பெண்கள் அரசியல் தலைவர்களாகி இருக்கின்றனர். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். சமூகத்தில் பெண்களின் பங்கு தவிர்க்க முடியாதளவுக்கு அவர்களது ஆற்றல்கள் மிகைத்து நிற்கின்றன. படைவீரனோ, பட்டதாரியோ, விஞ்ஞானியோ எவராக இருப்பினும் அவனது ஆளுமையானது ஆரம்பத்தில் பெண்ணின் பாசறையிலேதான் பயிற்றுவிக்கப்படுகிறது. இதையுணர்ந்துதான், இஸ்லாம் ஆரம்பித்திலிருந்தே பெண் அடிமைத்தலையை அறுத்தெறிந்தது.

இலங்கையுடன் நீண்டகால நட்பிலுள்ள பாகிஸ்தான், எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையை கைவிட்டதில்லை. கைவிடப்படும் பெண்கள்,விதவைகள் ,வறுமையில் வாடும் பெண்களை தூக்கி நிறுத்துவது அவசியம். அப்போதுதான், ஆற்றல் மற்றும் ஆளுமையுள்ள மனித வளங்களை உருவாக்க முடியுமென நம்புகிறேன்.

உலகில் நடைபெறும் யுத்தங்களை நிறுத்துவதுதான் மகளிருக்கு மனிதகுலம் செய்யும் சிறந்த கைங்கரியம். இதனால்தான்,பல பெண்கள் விதவைகளாகி சமூக சீரழிவுக்குள் சிக்குவாதாகவும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் உமர்பாரூக் பர்கி தெரிவித்தார்.

## எவோட்ஸ் – 2022 கவிதை போட்டி முடிவும் பரிசளிப்பும்

### புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2022

கலாசாரப் போட்டித் தொடரின் கவிதைப் போட்டிக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் போட்டியாளர்களில் முதலாம் இடத்தை மூதூரை

சேர்ந்த தெ.கரிகரனும் இரண்டாம் இடத்தை இறக்காமத்தை சேர்ந்த முஜாத் முஹமட்டும் மூன்றாம் இடத்தை நுவரெலியாவை சேர்ந்த கே.சந்திரகுமாரும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி (போயா)அன்று மாலை 4மணிக்கு கொழும்பு13,விவேகானந்தா சபை சிறு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகரும் கலைஞருமான ராதாமேத்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வினில் பிரதம அதிதியாக முத்தமிழ் காவலர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

இப்போட்டியில் சர்வதேச ரீதியில் முதலாம் இடத்தை நெதர்லாந்தைச் சேர்ந்த பசுவூர் கோபியும், இரண்டாம் இடத்தை

வீ.மீனாட்சியும் மூன்றாம் இடத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த மதுரம் ராஜ்குமாரும் பெற்றுள்ளனர்.

## புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் உணவகங்கள் பூட்டு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கடந்த சில நாட்களாக பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளன.

நாட்டில் எரிபொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், தற்போது சமையல் எரிவாயுவுக்கும், ரொட்டி மாவுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

இதனால், பாலாவி புத்தளம் பிரதான வீதி, புத்தளம் மன்னார் வீதி, புத்தளம் குருநாகால் வீதி, புத்தளம் அநுராதபுர வீதி, பாலாவி கற்பிட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பல உணவகங்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் இழுத்து மூடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதனால், உள்ளூர் மக்களும், புத்தளம் ஊடாக வடபகுதிகளுக்கு செல்லும் வாகன சாரதிகளும், பொது மக்களும் உணவுத் தேவைகளை பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில் "சமையல் எரிவாயு இல்லை" என்கின்ற பதாகைகளே தொங்க விடப்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், சமையல் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக முடிந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களை எடுத்துக் கொண்டு புத்தளம் முதல் நீர்கொழும்பு வரை சென்றும் இறுதியில் சமையல் எரிவாயு இன்றி ஏமாற்றத்துடனேயே திரும்பிச் செல்வதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## மலேசியா பல்கலை பீடாதிபதியாக கலாநிதி ரிஸ்கான் தெரிவு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற யாழ் மாநகர சபையின் முன்னாள் உதவி மேயர் எம்.ஜி. பஷீர் மற்றும் காலஞ்சென்ற ஓய்வுப் பெற்ற ஆசிரியை சுல்பா பஷீர் ஆகியோரின் புதல்வன் கலாநிதி பஷீர் ரிஸ்கான் மலேசியாவில் அல் புஹாரி பல்கலைக்கழகத்தில் கணனி மற்றும் தொடர்பாடல் பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஆரம்பக் கல்வியினை யாழ்ப்பாணம் பரியோவான் (St Jon's College) கல்லூரியில் கற்றதுடன், பின் அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் கற்றார்.

இப்பதவியானது இலங்கையின் வடமாகாணத்திலிருந்து சர்வதேச பல்கலைகழகமொன்றில் முதல் முறையாக ஒரு பீடத்தின் பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.



அரச உத்தியோகத்தர்களுக்கு அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற இரண்டாம் மொழி பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (05) மாளிகாவத்தையிலுள்ள கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள திணைக்களத்தில் நடைபெற்றது. இப்பாடநெறியின் சிரேஷ்ட போதனாசிரியரும், மொழித்திணைக்கள பரீட்சகருமான ஏ.எல்.உதுமாலெப்பையுடன் பாடநெறியைப் பூர்த்தி செய்தோர் இணைந்து எடுத்துக் கொண்ட படம். (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில்

## உலக வங்கி நிதியுதவியில் 290 கிராமிய குளங்கள் புனரமைப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தின் 290 கிராமிய குளங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் இக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இதன் கீழ் இது வரையில் சுமார் 25 குளங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்படும் குளங்களில் சுமார் 10 குளங்கள் உரிய பிரதேசங்களில் உள்ள விவசாயக் கழகங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இக் குளங்களின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் நூற்றுக்கு 89 வீதம் வரையில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக திட்டப்பிரிவின் அநுராதபுரம் மாவட்ட பணிப்பாளர் பி.டி.எம்.பிரேம்லால் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் ஆலோசனையின் பேரில் இவ் வேலைத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் விசேட விழிப்புணர்வு செயற்திட்டம்





வவுனியாவில் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் குற்றச் செயல்களை தடுத்தல் குறித்து பொலிசாரால் மாணவர்களுக்கு தெளிவூட்டும் விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியா, அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் விழிப்புணர்வு செயலமர்வொன்று பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (09.03) நடைபெற்றது. இதன்போது உயர்தரம் மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள், தொலைபேசி பாவனையால் ஏற்படும் விபரீதங்கள், சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டர் சைக்கிள் செலுத்துவதால் ஏற்படும் ஆபத்துக்கள், போக்குவரத்து விதிமுறை, போதைப்பொருள் பாவனை மற்றும் சமூக விழிப்புணர்வு தொடர்பில் பொலிஸாரால் மணவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. இந்நிகழ்வில் உலுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜகத்தாலா பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா விசேட நிருபர்

# கச்சதீவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தி

**யாழ். விசேட நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழாவிற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

நாட்டில் உள்ள கொரோனா இடர்நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் பங்கேற்புடன் பெருவிழாவினை சிறப்பாக நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருவிழா சிறப்பாக இடம்பெறுவதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# 15 வயது சிறுமி கடத்தல்; இளைஞன் கைது

**யாழ். விசேட நிருபர்**

ஊர்காவற்துறை பகுதியில் பெற்றோரின் பாதுகாப்பில் இருந்த 15 வயது சிறுமியை கடத்தி சென்று குடும்பம் நடாத்திய 18 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 18 வயது இளைஞனும் 15 வயதான சிறுமியும் காதலித்து வந்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சிறுமி வீட்டில் இருந்து வெளியேறி காணாமல் போயுள்ளார்.

அது தொடர்பில் சிறுமியின் பெற்றோரால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , சிறுமி தான் காதலித்த இளைஞனுடன் வீடொன்றில் வசிப்பதாக தெரியவந்தது.

இதனை அறிந்து, அங்கு சென்று சிறுமியை மீட்டதுடன், இளைஞனையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ள பொலிஸார், இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லேரியாவ, கொடல்ல மாவத்தை, இலக்கம் 552/2/G, என்ற முகவரியில் வசிக்கும் இலந்தாரி தேவ சுபுன் லக்மினி த சில்வா ஆகிய நான், முல்லேரியாவ, கொடல்ல மாவத்தை, இலக்கம் 552/2/G என்ற முகவரியில் வசிக்கும் இலந்தாரி தேவ சுமுசு ருவன் குமாரி த சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டதும் 2021 நவம்பர் 27ஆம் திகதி, கடுவெல பிரசித்த நொத்தாரிசு எச்.எம்.பி.பீ. ஹீன்கெந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 9637 இலக்கமுடைய அற்றோர்ணி தத்துவமானது 2022.03.10 முதல் செயல்வலுப் பெறும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர், என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் அனைவருக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

**இலந்தாரி தேவ சுபுன் லக்மினி த சில்வா**



சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது வழங்கும் வைபவம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் டிக்கோயா, தரவளை மேற்பிரிவைச் சேர்ந்த சி.கலாதேவன் கலையுலகில் நாடகம், அறிவிப்பு, எழுத்து, விளம்பர சேவைக்காக, கலாவிபூசண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.


## கொலன்னாவ நகர சபை

### அலுவலக விடயங்களை கணனிமயப்படுத்தல்

### கேள்வி கோரல்

கொலன்னாவ நகர சபையின் கலப்பு வருமானப் பிரிவிற்கு, கணக்குப் பிரிவிற்கு, வலையமைப்பின் ஊடாக வரிக் கட்டணங்களை செலுத்தும் மென்பொருள் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தேவையாக உள்ளது. அதற்கான கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் மாதிரிகளை ரூ. 1000.00 தொகையை செலுத்தி 2022.03.23 பி.ப. 2.00 இற்கு முன் கொலன்னாவ நகர சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களது விலைமனுக்களை 2022.03.24 மு.ப. 11.30 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2022.03.24 மு.ப. 11.30 இற்கு ஆகும். உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை கேள்விச் சபைக்கு உரியது.

**தலைவர்,**
**கொலன்னாவ நகர சபை**

**2022.03.09**

**தொ.பே.இல. 011-2572329**


# எரிவாயு தட்டுப்பாட்டினால் சைவ உணவகங்களுக்கு பூட்டு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் இயங்கி வந்த முன்னணி சைவ உணவகங்கள் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மூடப்பட்டுள்ளது. இதனால் பல தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர் .

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வவுனியா நகரில் இயங்கி வந்த முன்னணி சைவ உணவகங்கள் 3 நேற்று முதல் மூடப்பட்டுள்ளது.

இதனால் வாடிக்கையாளர்கள் உட்பட தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படுகின்றபோதும் எரிவாயு விநியோக நிலையங்களில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் மக்களுக்கு எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

உணவகங்களில் எரிவாயு தட்டுப்பாட்டினால் உணவகங்களை மூட வேண்டிய நிலை உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது .

# வனிதாபிமான போட்டியில் வவுனியா பெண் ஊடகவியலாளர்

**வவுனியா விசேட நிருபர்**



சமூக சேவையினை முன்னிலைப்படுத்தி அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 9 பெண்களில் வடமாகாணத்திலிருந்து வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த ஊடகவியலாளர் சிவகுமார் திவியா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மகளிர் தினமான நேற்று (08.03) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் வனிதாபிமான 2021 ஆம் ஆண்டுக்கான போட்டியில் 10 துறைகளில் 9 மாகாணங்களிலும் பெண்களிடேயே போட்டி இடம்பெற்றது.

இதில் சமூக சேவையில் வட மாகாணத்தில் முதலிடம் பெற்ற ஊடகவியலாளர் சிவகுமார் திவியா ஏனைய மாகாணங்களில் முதலிடம் பெற்றவர்களுடன் இணைந்து கௌரவிக்கப்பட்டார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு வருடாவருடம் வனிதாபிமான போட்டி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## இலங்கை வங்கி

**கிழக்கு மாகாணத்தின் பின்வரும் கிளைகளை இடமாற்றம் செய்வதற்குப் பொருத்தமான கட்டடங்கள் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றன.**

- புல்மோட்டை
- காத்தான்குடி

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 40 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தது 4 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 2000 - 2500 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். கட்டடமானது இரு மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 2000 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு (2'x 2') அளவிலான தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி (10'x 10') அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (மின்பிறப்பாக்கியை கொண்டு செல்ல தனியான வழிப்பாதை இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு கனரக இரும்பு கிறில் இடப்பட்டு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் , கட்டட வரைபடம் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடத்தைப் பெற்றுக் கொடுத்தல் - குறித்த கிளை**" எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாணக் காரியாலயம்,
இல: 455,
பிரதான வீதி,
திருகோணமலை.

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி
## பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | ஏப்ரல் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/05/12/19 | ஏப்ரல் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 06/20/25/26 | ஏப்ரல் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 03, சென் ஜூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 07/21/27/28 | ஏப்ரல் 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி கிரண். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல 3, 5 வல்லை வசதி சங்கானை. |
| 08/22/29/30 | ஏப்ரல் 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# INVITATION FOR BIDS (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA, KILLINOCHCHI, NORTHERN PROVINCE

### STATE MINISTRY OF PROVINCIAL COUNCILS AND LOCAL GOVERNMENT AFFAIRS

**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for the works mentioned in the table below.
2) The Chairman, Provincial Project Procurement Committee (PPPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the works mentioned in the table below.

| No. | Contract No. | Contract Name | Tentative Estimated Cost (Rs.Mn) | Required Min. CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period up to | Bid Security Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/KPS/2022/01 | Construction of Shopping Complex at Karachchi Pradeshiya Sabha Premises (Stage I) | 26.51 | C5 Building Construction | 182 | 400,000.00 | 04.08.2022 | 01.09.2022 |
| 02 | LDSP/NP/KN/KPS/2022/02 | Construction of Shopping Complex at Punnaineeravi Junction | 21.57 | C6 Building Construction | 147 | 300,000.00 | 23.06.2022 | 21.07.2022 |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.
6) Interested bidders may obtain further information from **Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Killinochchi**, (T.P No: 0212285761, Fax No: 0212285690) and inspect the bidding documents at the address given below from **10th March 2022** until **06th April 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **10th March 2022** until **06th April 2022** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Seven Thousand and Five Hundred Rupees (Rs.7,500.00).** The method of payment will be by cash.
8) Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project, Department of Local Government, Elders Home Complex, Kaithady, Jaffna** at or before **14.00 Hrs** on **07th April 2022.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9) A pre-bid meeting will be held on **31st March 2022** at **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Killinochchi.**

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project,**
**Department of Local Government,**
**Elders Home Complex, Kaithady.**
10.03.2022

---

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுவின் தலைவரினால் (SPC) **இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்** (TRCSL) **இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** பின்வருவனவற்றுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இலக்கம் | விபரம் | மனுப் பாதுகாப்பு (ரு.) | மீள் செலுத்தப்படாத மனுக் கட்டணம் (ரு.) |
|---|---|---|---|---|
| 01. | TRC/ADM/01/25/01/118 | மைக்ரோசொப்ட் Office 365 உரிமத் தொகுப்பை வழங்கல், நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல் | 200,000.00 | 5,000.00 |
| 02. | TRC/ADM/01/06/03/08/120 | TRCSL இன் ஸ்பெக்ட்ரம் பிரிவில் ஃபயர்வோல் அமைப்பின் உரிமம் புதுப்பித்தல் | 200,000.00 | 5,000.00 |

